# தென்மொழி



## தவிராமல் தமிழ்நலம் காக்க!

தனிமானம் கருதாமல் தனிநலத்தை விரும்பாமல்
தமிழ்மானம் தமிழர்நலம் கருதுவோர்கள்
இனியேனும் தமிழ்நிலத்தில் எழுந்திடுக!
பொதுத்தொண்டில்
இறங்கிடுக! எந்தமிழர்க் கேற்றம் காண்க!
பனியேனும் குளிரேனும் மழையேனும் வெயிலேனும்
பாராமல் தெருத்தெருவாய் ஊரூராகத்
தனியேனும் இணைந்தேனும் தந்தம்மால் முடிந்தவரை
தமிழினத்திற் குளமுவந்தே உழைத்தல் செய்க!

புலையறைவாய் விளம்பரத்தால் பொதுத்தொண்டர்
போல்நடித்துப்
பொருள்தொகுக்கும் புல்லியரும் மலிந்துபோனார்!
தலைமறைவாய்த் தமிழ்நலத்தைப் பகைவரிடம்
விலைபோக்கும்
தன்நலத்தார் தமிழ்நாட்டில் தலைமையேற்றார்!
இலைமறைவாய்க் காய்மறைவாய் உண்மைத்தொண்
டாற்றுவரும்
இந்நிலத்தில் இல்லாமல் இல்லை; இந்தத்
தலைமுறையில் அவரெழுந்து தவிராமல் சலியாமல்
தமிழ்நலத்தைக் காத்தால்தான் தப்புவோமே!

சுவடி: 14.
ஓலை: 12.
விலை: உரு. 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

# நமக்கு வந்த மடல்கள்.

*0: 580:* தங்களின் 'வேத மத இந்தியா' ஆசிரியவுரை இந்த நாட்டின் நடப்பை அப்படியே எதிரொலிப்பதாக உள்ளது. 'பொதுவாகவே இந்தியா என்றாலே, அஃது ஆரியர்கள் தேசம், இந்துக்கள் என்றாலே அவர்கள் 'பிராமணர்கள்' அல்லது அவர்களின் தலைமையை ஒப்புக் கொண்ட அடிமைகள்....' இக்கூற்று முழுக்க முழுக்க உண்மை என்பதைக் கண்டு கொண்டிருக்கிறோம். மனுதர்மச் சட்டப்படி 'இராம ராச்சியம்' நிறுவவே வெள்ளையன் வெளியேற்றம் பயன் பட்டுக் கொண்டிருக்கிறது. அன்று காந்தியாரும் பிராமணர்களும், இவர்களின் தாசர்களான தேசீயங்களும் 'வெள்ளையன் வெளியேறினால் இந்த நாட்டில் செல்வம் கொழிக்கும், தேனும், பாலும் ஓடும், என்று கூறினார்கள். அதே தேசீயங்களும், பூணூல்களுந் தாம் இந்த பாரதமாதாவை இன்றுவரை ஆள்கிறார்கள். காண்பதென்ன? பஞ்சம்; பட்டினிச்சாவு; தொத்தும் நோய்கள், வேலையில்லாத் திண்டாட்டம், நூற்றுக்கு ஐம்பதுக்கும் அதிகமான விழுக்காட்டினர் இந்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளார்களாம் அவர்கள் அறிக்கைப் படியே! இப்படி உள்ளவர்கள் அனைவரும் இந்தப் பார்ப்பன தேசீயங்கள் வளம்பெற மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்த சூத்திரர்களே.

இந்தியத் துணைக்கண்டம் முழு 'இராம ராச்சியமாக' மாற்றப் பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த இராம ராச்சியத்தில் இந்தியே ஆட்சி மொழி. இதை ஏற்றுக் கொண்டவர்கள் தாம் தேசபத்தர்களாம். 'தமிழ்' போன்ற மொழிகளின் பெயர்களைக் கூறினால் கூட மொழி வெறி, இனவெறி, 'தேசத் துரோகிகள்' போன்ற குற்றங்கள் சுமத்தப்படும், 'இராம ராச்சிய'மல்லவா? தமிழர்களாகிய சூத்திரர்கள் உரிமை கேட்பது 'தேசத் துரோகம்'. உண்மைதானே?

இந்த இராம ராச்சியத்தில் அண்மையில் ஒரு 'சிறிய' வேள்வி குசராத் மாநிலத்தில் நடத்தப் பட்டது. இதில் ஏழாயிரத்திற்கும் அதிகமான பிராமணர்கள் கலந்து கொண்டனராம். இராம இராச்சியத்தின்' அமைச்சர்கள் வாசுப்பேயரும், ராசுநாராயணனும் இதில் கலந்து கொண்டனர். ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான உணவுப் பொருள்கள் வேள்வித் தீயில் கொட்டப்பட்டனவாம். முப்பத்திரண்டாயிரம் கிலோ நெய், எள்ளும் அரிசியுமாக இருபத்து ஐயாயிரம் கிலோ; ஐம்பதாயிரம் லிட்டர் பால் என்பனவும் இதில் அடங்கும்.

இந்த மாதிரி வேள்விகள் இனி நாடெங்கிலும் நடத்தப் படலாம். நாட்டின் நலன் கருதிப் பட்டினிச் சாவுகளை ஒழிக்க இராமஇராச்சியத்தின் அமைச்சர்கள் இதில் தொடர்ந்து கலந்து கொள்வார்கள். இதற்காக நாடாளு மன்றத்தில் புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப் படலாம். இதன் மூலம் தாங்கள் உண்மையான பகுத்தறிவுக்காரர்கள் என்று 'இராம இராச்சியத்தின்' அமைச்சர்கள் நம்மால் ஒப்புக் கொள்ளப்படவும் சட்டம் கொண்டு வரப்படலாம்.

நம்மைப் போன்ற சூத்திரர்களுக்கு இந்த வேள்வியின் 'மகத்துவம்' தெரியாது. நாம் ஏன் உணவுப் பொருள்களை இப்படி வீணடிக்கிறீர்கள்?' என்று கேட்டால் பட்டினியால் செத்தவர்கள் 'மோட்சம்' அடைய என்ற அறிவு முறை(!)யிலான விளக்கங்கள் தருவார்கள்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

# அன்றையும் இருந்தேன்;
# இன்றையும் இருந்தேன்;
# என்றையும் இருப்பேன்;

---

காற்றோடு காற்றாய் உருக்கரந் திருந்தேன்!
கதிரொடும் ஒளியாய் இருந்தேன்!
ஊற்றொடும் ஊற்றாய் இருவெளிப் பட்டேன்;
ஒழுகுவெள் ளருவியாக் குதித்தேன்!
ஆற்றொடும் ஆறாய் அகல்வழி நடந்தேன்;
ஆழியிற் கலந்துடல் பரந்தேன்!
நாற்றோடு நாற்றாய் நல்வயல் விளைந்தேன்!
நறுநெல் மணியெனப் பொலிந்தேன்!

மேலொளி வானில் முகிலொடு மிதந்தேன்;
மின்னலில் இடியினில் தெறித்தேன்;
காலொழி விசும்பில் கண்ணிமை மீனக்
காட்டிடை ஊழிபல் ஒளிர்ந்தேன்!
பால்வெளி மண்டிலப் பாதையில் திரிந்தேன்;
பாழினுள் நெடுநாட் புதைந்தேன்!
வாலறி மெய்ப்பொருள் வாய்த்துயிர் கலந்து
வாய்க்கொணா இன்புணர்ந் திருந்தேன்!

தென்றலிற் கலந்து பூவொடு மணந்தேன்!
தேனெனத் தும்பியுட் புகுந்தேன்!
குன்றிடைக் குருவிக் குழாத்தொடு பறந்து
குயிற்கிளி இசையொடு பேசி,
மென்றுமிழ் கோதில் மீள்வெளிப் பட்டு
மேய்தரு பசும்புலாய் விளைந்தேன்!
தின்றமிழ் தளிக்கும் ஆவொடு மேவித்
திரிதரு விலங்கொடு திரிந்தேன்!

அன்றையு மிருந்தேன்; இன்றையு மிருந்தேன்;
ஆனபின் என்றையும் இருப்பேன்!
ஒன்றையுந் தவிரா துயிருணர் வுடலாய்
ஒன்றினுள் ஒன்றாய் உயிர்ப்பேன்!
என்றையு மில்லா இருள்நினை வில்லேன்;
என்றையும் பின்றையு மிருந்தேன்!
மன்றையும் நிறைத்து மனத்தையும் குவித்து
மலர்த்துமெய்த் தமிழாய் மணப்பேன்!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!




சுவடி: 14 ஓலை : 12,

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

தென்மொழி
இலக்கிய இதழ்

மேழம்-விடை தி. பி. ௨00௧-ஏப்பிரல்-மே-1978.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்.
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன,]


# வேத-மத-இந்தியா 3.



சமசுகிருத மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் பிராமணமதமாகிய வேத மதமும் அஃதாவது இந்து மதமும், பிராமணீயமும் நிலைத்து நிற்கவும், வளர்ந்து ஓங்கவும் முடியும். சமசுக்கிருத மொழி அழிவுறுமானால், பிராமணீயம் இந்தியாவில் ஒரு நொடிப் பொழுதும் உயிர் வாழ முடியாது. "ஓரினத்திற் கடிப்படையாகவுள்ளது அவ்வினத்தின் மொழியே. அம்மொழி அழியுமானால் அவ்வினமும், அவ்வினத்தைப் பற்றி வளரும் கலைகளும் பண்பாடும் பிற அறிவுக்கூறுகளும் படிப்படியாகவும் ஆனால் விரைந்தும் அழிந்துவிடும்" என்னும் இயற்கைக் கோட்பாடே, சமசுக்கிருத மொழி நிலையிலும் உண்மையாகச் செயற்படும் என்பது, பிராமணர்களுக்குத் தமிழினத்தவர்களைவிட நன்கு தெரியும். இவ்வகையிலேயே வடநாட்டவர்களான ஆரியப் பார்ப்பனர்களும் தங்கள் ஆட்சியதிகாரங்களை நிலைப்படுத்தும் முயற்சியாக, இந்தியை இந்

நாட்டின் ஆட்சி மொழியாகவும் இணைப்பு மொழியாகவும் ஆக்குவதில் பெரிதும் முனைப்பும் பரபரப்பும் காட்டுகின்றனர். இவ்வுண்மையைத் தமிழர்கள் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இந்திமொழி சமசுக்கிருத அடிப்படை கொண்டது. எனவே அதன் வளர்ச்சி சமசுக்கிருத ஆக்கத்திற்கு ஒருவகைத் துணையாக நிற்கும் என்பதைப் பிராமணர்கள் உணர்ந்திருக்கின்றனர். இந்தியை ஆட்சி மொழியளவில் இந்நாட்டின் அதிகார மொழியாக நிலைப் படுத்திவிட்டால், அதன் வேராக நின்று சமசுக்கிருதம் இயங்கும் அல்லது இயக்கும் என்பதையும் அவர்கள் நன்கு உணர்வர். எனவேதான் சமசுக்கிருத வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொள்ளும் பிராமணர்கள் இந்தி நுழைவிலும் ஓரளவு அக்கறை காட்டி வருகின்றனர். வடநாட்டினரின் இந்தி மொழி வளர்ச்சியையும், சமசுக்கிருத மொழி எழுச்சியையும் தடுத்து நிறுத்தும் ஆற்றல், திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ் மொழிக்கே உண்டு. மற்றைய அனைத்துத் திராவிட மொழிகளுக்கும் சமசுக்கிருதம் புறக்கணிக்கப் படும் ஒரு மொழியன்று. சமசுக்கிருதத்தை விடுத்து அம்மொழிகள் ஒருபோதும் தம்மளவில் நின்று தனித்தியங்கா: உயிரும் வாழா. தமிழ் மொழியின் நிலை அவ்வாறானது அன்று. சமசுச்கிருத மொழி யின் கூட்டுறவை எவ்வளவுக் கெவ்வளவு அது தவிர்க்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு தன்னளவில் நின்றுதனித்து வளர்ந்து செழிக் கும் தன்மையுடையது. சமசுக்கிருத மொழித் தொடர்பே தமிழ்மொழி யின் தனித் தன்மையையும், அதன் அறிவு வளத்தையும் வளர்ச்சி யையும் கெடுக்க வல்லது. எனவே மற்றைய திராவிட மொழிகளான மலையாளம், தெலுங்கம், கன்னடம், துளுவம் முதலிய மொழிகள் சமசுக்கிருதத் தொடர்பை ஒரு காலத்தேனும் விட்டுவிடும், அல்லது தளர்த்திக் கொள்ளும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவ்வாறு செய்வது அவற்றின் தற்கொலை முயற்சியாகவே இருக்கும். மேலும் சமசுக்கிருத மொழியின் தொடர்பை அவை கைவிடக் கைவிட அவற்றின் தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கு அவை மிக நெருக்கமான மொழிகளாகிவிடும். இன்னுஞ் சொன்னால், அவை தமிழாகவும் ஆகிவிடும். அக்கால் அவற்றின் சொற்களில் மட்டும் இடச்சிதைவும், காலச்சிதைவும், வரலாற்றுச் சிதைவும் நன்கு புலப் படும்படி இருக்கும்.

எனவே, அவை சமசுக்கிருதத்தைத் தவிர்த்துக்கொள்ள இயலவே இயலாது. அவற்றிற்கு அது விருப்பமானதாகவும் இல்லை. சமசுக் கிருதத்தைத் தவிர்த்துக்கொள்ள இயலாத பொழுது, அம்மொழியை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்து சமயச் சார்பையும் அவற்றின்

வழிப் பிராமணீயப் பிடிப்பையும் எவ்வாறு அவற்ருல் விட்டு விட முடியும்? இவ்வுண்மையை மொழியளவிலும் அதன்வழி இன அளவிலும், அவற்றின் வழி வரலாற்றளவிலும் நன்கு விளங்கிக் கொள்ளாத நிலையில்தான், தமிழர்களிடையே திராவிட இயக்கம் என்று ஒன்று தோற்றுவிக்கப் பெற்றது. அவ்வாறு தோற்றுவிக்கப் பெற்ற திராவிட இயக்கத்திற்குத் திராவிட நாடு பெறுவது ஒரு தலையாய குறிக்கோளாக விருந்தது. காலப்போக்கில் அவ்வியக்கத்தையும், அதன் குறிக்கோளையும் மிகக் கடினமாக கற்பனைகள் என்றுணர்ந்த அதன் தலைவர்கள், அம் மெய்ம்மமல்லாத நோக்கங்களுக்குத்தம் காலத்தையும் முயற்சிகளையும் செலவிடுவது அறியாமை என்று கண்டபின், அவற்றைக் கைவிட்டுவிடத் துணிந்தனர். ஆனுல் இத்துணைக் காலம் தம் அறியாமைப் போக்கை நம்பித் தம் உடன் வந்த ஒன்றுமறியாத பல்லாயிரக்கணக்கான பேதைமக்களை உடனடியாக ஏமாற்ற விரும்பாத அவர்கள், அக் கைவிடுப்புக்கு முற்றும் பொருத்தமில்லாத அரசியல் புறக்கரணியங்களைக் கூறி, நெடுநாள் முயன்ற அக் குறிக்கோள்களை, ஒரு நொடிப் பொழுதில் ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டனர். இவ்வகையில் அவர்களின் பின்னைய தவறுகளின் முன்னைய தொடக்கம் எங்கே இருக்கின்றது என்பதை அவ்வியக்கங்களைச் சார்ந்த தலைவர்களுக்கும்கூட அறியாத உணர்வுடையவர்களாகவே இருக்கின்றனர் என்பதை இரக்கத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. தமிழினத்தின் படிப்படியான தோல்விகளுக்கு அடிப்படையான, அக் கரணியம் என்ன என்பதை இன்னமும் அவர்கள் உணர்ந்துகொள்ள அணியமாக இருப்பதாகவும் தெரியவில்லை. ஏனெனில், இப்பொழுதுள்ள குழப்ப நிலைகளிலேயே அவர்களுடைய அரசியல் வாணிகம் நன்கு நடந்து வருகிறது. அதைக் கெடுத்துக்கொள்ள அவர்கள் விரும்பாதது. ஆழ்ந்த இனவுணர்வற்றவர்களுக்கு இயற்கையே!

இனி, சமசுக்கிருதம் என்பது அரைச் செயற்கையான ஒரு மொழி என்பதை நம்மில் பலரும் அறியார். மாருக, பிராமணரின் இந்துமத மயக்கங்களில் தம் மதியைப் பறிகொடுத்த தமிழர், அதை ஒரு தெய்வமொழியென்றே கருதி, அச்சமும் நம்பிக்கையும் கொண்ட ஓர் உணர்வு கொண்டிருப்பதாகவே தெரிகிறது. மேலும், இந்திய அரசின் தலைமையிடங்களில் உள்ள அதிகாரிகளும், பிற பார்ப்பனத் தலைவர்களும் வாய் கோணுமல் கூறிவருவதைப் போல், 'இந்திய மொழிகளனைத்துக்கும் தாய் சமசுக்கிருதமே' என்றும் 'கோவில்களில் வழிபாடு செய்வதற்குரிய தெய்வீகத் தன்மை கொண்டதும் அதுவே' என்றும், 'சமசுக்கிருதம் இறந்துபட்ட மொழியென்பது தவருனது' என்றும், அது எல்லாரும் படிப்பதற்குக் கடினமானதென்று கூறுவதும்

பிழையானது' என்றும், இந்தியக் கலை, பண்பாடு இவற்றிற்கெல்லாம் அடிப்படையானது சமசுக்கிருதமே' என்றும், 'அதை அனைவரும் வேறு பாடில்லாமல் கற்கவேண்டும். என்றும், பலவகையாகத் தம் வாய்க்கு வந்தபடியெல்லாம், ஒன்றுமறியாத ஏழை மக்களிடமும், பார்ப்பனக் கொள்கைகளால் பலவகைக் குமுகாய, அரசியல் ஊதியங்களும் பொருளியல் நலன்களும் பெற்றுவரும் பணக்கார ஏமாளிகளிடமும் கூறிவருகின்றனர். இவற்றுக் கெல்லாம் இயைபாக, அரசுப் பதவி தாங்கும் அவ்வமைச்சர்களும் ஆளுநர்களும் அதிகாரிகளும், இந்துமத விழாக்களிலும், கோயில் குடமுழுக்குகளிலும், கலந்து கொள்வதும், பிராமணீயக் கோட்பாடுகளுக்குத் தம்மை அடகு வைத்துக் கொள்வது போல், சமசுக்கிருத மொழிக்குக் கண்ணை மூடிக்கொண்டு அரசுப் பணத்தை எடுத்துக் கைத்தாராளமாகச் செலவழிப்பதும், அம்மொழி சார்ந்த இந்துமதக் கொள்கைகளுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் அளவிறந்து வழிவிட்டு ஒதுங்குவதும், மிகவும் ஒருசார்புத் தன்மையும் கொடுமையும் வாய்ந்தன ஆகும். சமசுக்கிருத மொழி வளர்ச்சியிலும், பிராமணீயப் பரப்புதலிலும், இந்துமத எழுச்சியிலும் இவ்வரசு காட்டுகின்ற தலைக்கு மீறிய அக்கறையும் ஆர்வமும், இதனை ஒரு மதவெறி பிடித்த அரசு என்றுகூடக் கருதும்படி செய்து விடுகின்றன. இந்துமதத் தலைவர்களுக்கும் மடாதிகாரிகளுக்கும் தங்களை ஆட்படுத்திக் கொண்டு அடிமைப் படுவது, மதச்சார்பற்ற அரசுக்குரிய இலக்கணமாக இருக்க முடியாது. இந்திராகாந்தியின் வல்லாண்மைக் காலத்தில், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் பதவியிலிருந்த ஒரு பிராமண அடிமை, காஞ்சி காமகோடி பீடத்தலைவர் தங்களுக்கு ஆட்சி முறையில் வழி காட்ட வேண்டும் என்று வெளிப்படையாக அறிவித்த செய்தி, அரசு அதிகாரிகள் எப்படிப் பிராமணீயத்திற்குத் துணை போகிறார்கள் என்பதைத் தெளிவாக உணர்த்தும்.

பலபடியாக உயர்த்திப் பேசப் பெற்றுவரும் சமசுக்கிருத மொழியே பிராமணர்களுக்கு உயர்ந்த மொழி, அவர்கள் அதில் பேசிப்பழகி எழுத முடியாமற் போனாலும் அவர்களுக்குத் தாய்மொழியும் அதுவே! அவர்கள் தங்கள் தாய்மொழி தமிழ் என்று என்றைக்கும் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ ஒப்புக் கொண்டதே கிடையாது. அவ்வாறு ஒப்புக் கொண்டாலும் அது, அன்றைக்குள்ள அரசியல் வாழ்க்கை முதலிய சூழல்களையும் பொறுத்தே பொருள் படுத்திக் கொள்ள வேண்டிய ஒன்றாகவே ஆகும். இவ்விடத்தில் மறைந்த நயன்மைக் கட்சித் தலைவர் வயவர். அ.தி. பன்னீர்ச் செல்வம் என்னும் தமிழர் தலைவரின் கூற்றை-எச்சரிக்கையை நாம் நினைவு கூர்தல் நல்லது. "ஆரியப் பார்ப்பனர்கள் தேவையின் பொருட்டே தமிழைப் பயன்படுத்துகின்றனர்; அஃதாவது ஆங்

கிலத்தைக் கற்றுக் கொள்வதைப் போல. மற்றபடி அவர்கள் சொந்த மொழியாகக் கருதுவது சமசுக்கிருதத்தையே. 'தமிழை விட சமசுக்கிருதமே மேல' என்பதே அவர்களின் முடிந்த முடிவாகும்.''—என்பது அவர் கூற்று.

அரசியல் அதிகார நிலையில் பிராமணர்கள் எத்தனைக் கூறுகளாகப் பிரிந்து கிடந்தாலும், அவர்கள் மொழியாகிய சமசுக்கிருதத்தைக் கருதுகின்ற வகையிலும், அதனைக்கட்டிக்காத்து அதன்வழி பிராமணீயத்தைப் பேணுகின்ற வகையிலும், அவர்களை வேறுபட்டவர்களாகக் கருத முடியாது என்பதற்கு மேற்கண்ட அடிப்படை உணர்வுண்மையே கரணியமாகும். காலஞ்சென்ற இராசாசிக்கும், காந்திக்கும், நேருவுக்கும், அவர்களின் அரசியல் பிறங்கடையினரான கிருபளானிக்கும், தேசாய்க்கும், இந்திராகாந்திக்கும் அரசியல், பொருளியல் கொள்கைகளில் அவற்றின் நடைமுறைகளில், எவ்வளவு மாறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள், மந்த விரைவுப் போக்குகள் இருந்தாலும், அவர்கள் அனைவரும் பிராமணர்களாகையால், சமசுக்கிருத மொழியைப்பற்றியும், வேதங்களைப் பற்றியும், இந்துமதக் கோட்பாடுகள் பற்றியும் அவர்களிடத்தில் எந்த வகையான வேறுபாட்டையோ, மாறுபாடான நடைமுறையையோ எவரும் காணமுடியாது. அவர்கள் இனத்தைப் பொறுத்தவரை, அவர்கள் அனைவரும் பிராமண இனக் காவலர்களே! இக்கருத்தை எந்தச் 'சூத்திர' சுப்பிரமணியமோ, 'அநும' பக்தவத்சலமோ, 'விடண' ம.பொ.சி,யோ, 'பிரகலாத'க் கண்ணதாசனோ, வேறு எவருமோ மறுத்து விட முடியாது. மற்றபடி, அவர்களுக்கியைபாக இவ்வடிமை மக்கள் எழுதிக் காட்டும், அல்லது பேசிக் காட்டும், 'அர்த்த முள்ள இந்து மதக்' கருத்துகளெல்லாம், அவர்களின் அடிமைத்தனத்தின், அல்லது அறியாமையின் அல்லது பணத்திற்குப் பவ்வீ தின்னும் குணக் கீழ்மையின் வெளிப்பாடுகளாகவே இருத்தல் முடியும்.

சமசுக்கிருத மொழிப் பேணுதல் எவ்வாறு இவ்வாரிய வடவராட்சியில் நடைபெற்று வருகிறது என்பதற்கு இதற்கு முன்பும் சில சான்றுகளைக் காட்டியுள்ளோம். இன்னொரு வெளிப்படையான செய்தியையும் ஒரு சான்றாக இங்குக் காட்டுகிறோம். இந்தியாவில் ஏறத்தாழ இக்கால் 85 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவற்றில் இந்தியாவின் 14 தேசிய மொழிகளுள் ஒன்றிரண்டையோ மூன்று நான்கையோ கற்கும் வாய்ப்புகள் உள்ளன. சில குறிப்பிட்ட பல்கலைக் கழகங்களில் சில குறிப்பிட்ட மொழிகளைக் கற்கலாம். அனைத்து மொழிகளையும் ஒரே பல்கலை கழகத்தில் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்துவது என்பது அத்துணை எளிதன்று. எனவே சில பல்கலைக் கழகங்கள் குறிப்பிட்ட சில மொழிகளைக் கற்பிப்பனவாய்

உள்ளன. இணைப்பு மொழியாகக் கருதப்படும் இந்தி மொழியை ஏறத்தாழ 70 பல்கலைக் கழகங்கள் கற்பிக்கின்றன. பஞ்சாபி மொழியில் படிக்க 5 அல்லது 6 பல்கலைக் கழகங்களில் தான் இயலும். அசாமி 2, 3இல் கற்பிக்கப் பெறுகிறது. இந்தியை ஓரிரண்டு பல்கலைக் கழகத்தில்தான் கற்கலாம். உருது மொழியை ஏறத்தாழ 30 ப.க.க-இல் படிக்கலாம். தமிழ் மொழியைப் 12 அல் 13 பல்கலைக் கழகங்களில்தான் கற்கலாம். இப்படி இந்தி; உருது, மராத்தி, வங்காளி, குசாரத்தி, தமிழ், தெலுங்கு, கன்னடம், பஞ்சாபி, ஒரியா, மலையாளம், அசாமி, சிந்தி ஆகிய 14 தேசிய மொழிகளையும் பலவாறான அளவில் பல்வேறு எண்ணிக்கையில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கும் இந்நடுவணரசு தேசிய மொழியல்லாத, ஏறத்தாழ 500 பேர்களே பேசுவதாகவும், 5000 பேர்களுக்கே தெரிந்ததாகவும் குறிக்கப் பட்டுள்ள சமசுக்கிருத மொழியைக் கற்றுக்கொள்ள மட்டும் ஏறத்தாழ 80, 82, பல்கலைக் கழகங்களில் வாய்ப்பளிப்பது ஏன்? அதன் முன்னேற்றத்திற்கு மட்டும் மக்களில் 97 விழுக்காட்டினர் தரும் வரிப்பணத்தில் தாராளமாக வாரிவழங்கப் படுவது ஏன்? இவ்வினாவிற்கான விடையில்தான் பிராமணீயம் மறைமுகமாக இந்நாட்டை ஆண்டு வருகின்றது என்பதற்கான அடிப்படை உண்மையைக் காண முடியும்! மற்றபடி அது பேராயக் கட்சி என்று பெயர் பெறலாம்; இந்திராக் கட்சி எனப் பெறலாம்; சனசங்கம் ஆர். எசு. எசு-என்றெல்லாம் பெயர் பெறலாம்; பொதுவுடைமைக் கட்சி என்று கூடச்சொல்லப் பெறலாம்; இல்லை அனைத்துக் கட்சிகளின் அவியலைப் போலும் 'சனதா' என்றும் மாற்றம் பெறலாம். பெயர்கள் என்ன வானாலும் இந்தியாவைப் பொறுத்தவரை, அதனை ஆளக் கூடிய தகுதிவாய்ந்ததாகவும், வாய்ப்பு நிறைந்ததாகவும், பிற அனைத்து இன மக்களை தன் காலடியில் போட்டு நசுக்கத் தக்க சாதி, மதக் கோட்பாடுகளைக் கொண்டதும், அவற்றுக் கடிப்படையான வேத; புராண, இதிகாச மூடமந்திரப் புளுகு மூட்டைகளைப் பின்புலமாகக் கொண்டதுமான பிராமணீயம் என்னும் சரக்கு ஒன்றே என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். (தொடரும்)

(குறிப்பு: இத்தலைப்பில் இன்னும் 10, 12 தொடர்கள் வரலாம், கூடவும் கூடலாம். ஆயினும் அன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்க இக் கட்டுரைத் தொடர் தனி நூலாக அச்சிடப் பெறுகிறது. குறைந்த படிகளே அச்சிடப்பெறுகின்றன- ஆகையால் முன்கூட்டியே நூல் வேண்டும் அன்பர்கள் பதிந்து கொள்வது நல்லது இப்பொழுது தொகை விடுக்கவேண்டா. பின்னர் நூல்வடிவில் வெளிவரும் பொழுது தெரிவிக்கப் பெறும். அக்கால் தொகை யனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இகால் பெயர்களை மட்டும் தெரிவித்தால் போதுமானது.
—அமைச்சர்.)

# பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இலங்கைச் செலவு

'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இலங்கையில் நடைபெறும் திருக்குறள் மாநாட்டிலும், மற்றும் பல தமிழ் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றும் பொருட்டு இலங்கையில் சுற்றுப்போக்கு மேற்கொண்டிருக்கின்றார்.

இலங்கைத் தமிழ்மறைக் கழகத்தின் சார்பில் மே மாதம் 20, 21, 22 ஆகிய நாள்களில் இலங்கையிலுள்ள புங்குடு தீவில் திருக்குறள் மாநாடு சிறப்புற நடைபெற்றது. இம் மாநாட்டிலும், மற்றும் இலங்கைத் தமிழர் சார்பாக ஆங்காங்கு நிகழும் பற்பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுமாறு 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அழைக்கப் பெற்றிருக்கின்றார். இதற்குரிய ஏற்பாடுகளைத் தமிழ்மறைக் கழகத் தலைவரும் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினருமான தமிழ்ப் பேரறிஞர் திரு. க. பொ. இரத்தினம், க.மு., கீ.க,மு., அவர்கள் செய்துள்ளார். இலங்கைத் தமிழர் முன்னணி இதழான 'சுதந்திரன்' ஆசிரியர் திரு. கோவை-மகேசன் அவர்களும் பாவலரேறு அவர்களின் வரவைப் பெரிதும் விரும்பி வரவேற்றுள்ளார்.

19—5—78 அன்று திருச்சியிலிருந்து விண்ணூர்தி வழியாக இலங்கை சென்ற பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமது சுற்றுப் போக்கை முடித்து, சூன் மாதம் தொடக்கத்தில் தமிழகம் திரும்புவார்.

---

## இந்தியாவில் திரவிட மொழி பேசுவோர் 12 கோடி

1972-ஆம் ஆண்டுக் கணக்குப்படி, இந்தியாவில் திரவிட மொழி பேசுவோர் தொகை 12 கோடியாகும். இது மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ கால் பகுதியாகும். வட இந்தியாவில் குசராத்து, மகாராட்டிரம், மத்திய பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார் மக்கள் மற்றும் மலைவாழ் மக்களில் 70 விழுக்காட்டினர் ஆகியோர் திராவிட மொழிகளைப் பேசுகின்றனர். மத்திய பிரதேச மலைப்பகுதிகளில் வாழும் 73 இலக்கம் பேர்களில் 62 இலக்கம் பேர்கள் திரவிட மொழிகளைப் பேசுகின்றனர். திரவிட மொழிகள் இந்தியாவில் மட்டுமன்றி இரான், சப்பான், ஆப்கானித்தானம், பாகிசுத்தான், சோவியத்து ஒன்றியத்தில் ஒருபகுதி, ஆத்திரேலியா ஆகிய இடங்களில் வாழ்கிறவர்களும் திரவிட மொழிகள் பேசுகிறார்கள். தமிழ் பற்றியும் திரவிட மொழிகள் பற்றியும், திருவனந்தபுரத்தில் உள்ள திரவிட மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் விரிவாக ஆராய்ச்சி நடத்தத் திட்டமிட்டுள்ளது. ஆண்டு தோறும் ஆய்வாளர்களைக் கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி ஆய்வு செய்யவும், இந் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இவ் வாராய்ச்சிப் பணிகளுக்கென ஆண்டு தோறும் 1.36 இலக்கம் மேனி 5 ஆண்டுகளுக்குத் தொடர் செலவாகவும் 4.51 இலக்கம் தொடராச் செலவாகவும் செலவு செய்ய அந் நிறுவனம் கருதியுள்ளது. அச் செலவுகளுக் கென எல்லாத் தென் மாநிலங்களையும் அது உதவி செய்யக் கோரியுள்ளது. தமிழ் நாட்டு அரசும் அது கேட்டுக் கொண்ட உதவியைத் தரும் என்று அரசுச் செய்தி ஒன்று கூறுகிறது.

# கி. ஆ. பெ. தொடங்கியுள்ள தமிழர் பேரவை.

திருச்சி, முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தமிழர் பேரவை என்றொரு புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளார். தமிழர்களுக்கிடையில் உள்ள சாதிப் பிரிவுகளைவிட, கட்சி, குழு, கழகம் என்னும் பிரிவுகள் இக்கால் மிகுதியாகி வருகின்றன. அண்மையில்தான் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் 'திருக்குறள் பேரவை' என்னும் அமைப்பு தொடங்கப் பெற்றுச் செயல் பெற்று வருகிறது. தமிழர் பேரவை அதற்குப் போட்டியாகத் தொடங்கப் பெற்றிருக்க முடியாது என்று கருதுகிறோம். ஆனாலும் தமிழர் முன்னேற்றம், தமிழ் முன்னேற்றம் என்று கூறிக் கொண்டு வெறும் அமைப்புகளை மட்டுமே தொடங்குவது தமிழரைப் பின்னடையவே செய்யும்!

கடந்த ஏப்பிரல் 7, 8- இல் சென்னையில் 'தமிழர் பேரவை' யின் முதலாவது மாநாடு நடந்தது. பெரும்பாலும் ஓர் அமைப்பில் உள்ளவர்களைப் பார்த்தாலே அந்த அமைப்பால் தமிழ்மொழிக்கும் தமிழர்க்கும் எத்துணையளவு நன்மை கிடைக்கும் என்று ஒருவாறு கணித்து விடலாம். தமிழையும் தமிழினத்தையும் அடகு வைத்து, அல்லது காட்டிக் கொடுத்துத் தமிழரை முன்னேறச் செய்து விட முடியாது. இந்த உண்மையைக் கடந்த கால முயற்சிகளைக் கொண்டு எல்லாரும் தெளிந்து கொள்ள வேண்டும். தமிழ் மொழியின் முன்னேற்றமே தமிழர் முன்னேற்றமாக அமைய முடியும் என்பதையும், மொழியில் காட்டப் பெறும் நெகிழ்ச்சி இனத்தை எந்த அளவுக்குப் பின்னுக்குத் தள்ளும் என்பதையும், இக்கால் இந்திக்கும் சமசுக்கிருதத்திற்கும் செய்யப் பெறும் பல்வகை அரச வரவேற்புகளை வைத்தே நடுநிலை அறிவுள்ளவர்கள் ஒருவாறு விளங்கிக் கொள்ளலாம்.

தமிழர் பேரவை தன் முதல் மாநாட்டின் முடிவில் மொத்தம் 16 தீர்மானங்களைப் போட்டுள்ளது. 'தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும்', 'சித்த மருத்துவத்தை மேலும் அறிவியல் முறையில் விரிவு படுத்த வேண்டும்', 'தமிழக அரசியல் கட்சிகள் தங்கள் கட்சி வேற்றுமைகளை மறந்து விட்டுத் தமிழக முன்னேற்றத்தில் ஒன்று பட்டு உழைக்க வேண்டும்', தமிழ் நாட்டில் உள்ள வானொலி நிலையம் 'ஆல் இண்டியா ரேடியோ' என்று கூறாமல், 'வானொலி நிலையம்' என்று குறிப்பிட வேண்டும்' என்பன அத்தீர்மானங்களுள் சில. இவையெல்லாம் தமிழ் மக்களின் இன்றைய கோரிக்கைகள் மட்டும் அல்ல; எத்தனையோ மாநாடுகளில் எவரெவர் தலைமையிலோ விடுக்கப் பெற்ற வேண்டுகோள்கள் இவை என்பதை அனைவரும் அறிவர். ஏன்,

கி. ஆ. பெ. விற்கே தெரியும்! அவர் அமைப்பிலிருந்த தமிழகப் புலவர் குழுவின் வேண்டுகோள்கள் என்ன ஆயின என்றும் அவர் அறிவார்! வெறும் வேண்டுகோள்களால் எந்தப் பயனும் விளைந்து விடப்போவதில்லை. தமிழினத்தைத் திட்டமிட்டுத் தாக்கும் உள்முகச் செயல்கள் இக்கால் பல. அவற்றை மக்கள் மன்றத்தில் வெளிப்படையாகச் சொல்லித் துணிந்து எதிர்ப்பதற்கே இப்பொழுது ஆட்கள் தேவை. அப்படிப்பட்டவர்களைத் தமிழர் பேரவை இணைக் கூட்ட முடியுமா?

'தமிழ்' என்றாலே பிரிவினை என்று கருதுகிற தேசிய வெறியுப், தமிழ் முன்னேற்றத்தை அணுவளவும் வளர விடமால் தடுத்துக்கொண்டிருக்கும். 'சமசுக்கிருத' 'இந்தி' வளர்ச்சித் திட்ட மறைமுகச் சூழ்ச்சிகளும், ஆரியர், வடவர்-இவர்களின் ஆளுமை வல்லாண்மைகளும், இவற்றிற்கு இங்கிருந்து நேரிடையாகவும் மறைமுகமாகவும் ஆதரவும் உழைப்பும் பொருளும் கொடுக்கின்ற வீடண, பிரகலாத, சுக்கிரீவன்களும் இந்நாட்டில் இருக்கும் வரை இவை போன்ற எத்தனை முயற்சிகளும் தவிடு பொடியாகத்தான் போகும் என்பதை கி. ஆ. பெ. அறியாதவரல்லர். இருந்தாலும் தாமும் ஒரு பேரவையைத் தோற்றினோம் நடத்தினோம் என்று இருக்கட்டுமே என்பது அவர் கருத்தாக இருக்கலாம். அந்த நிலைக்கு, இவர் ஏற்கனவே தொடங்கி நடத்தி வந்த தமிழகப் புலவர் குழு என்ன ஆனது?

இனி, இதில் இன்னொரு செய்தியும் திரு. கி. ஆ. பெ. அவர்களைப் பற்றி நமக்கு விளக்கம் ஆகல் வேண்டும். கடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் பொழுது, கோவையில் கிளர்ந்தெழுந்த மாணவர் கூட்டத்திடம் போராட்டத்தைக் கைவிடும் படியும், இந்தி யெதிர்ப்பைத் தாம் கவனித்துக் கொள்வதாகவும் கூறிய இவர், மீண்டும் ஏதாகிலும் இந்தி யெதிர்ப்புக் குரல் கொடுத்தாரா அல்லது போராடினாரா என்பதை, இம் முதிய இந்தியெதிர்ப்பு வீரரைப் பார்த்து நாம் கேட்க விரும்புகின்றோம். அதுவுமன்றி, ஐந்தாண்டுகளுக்கு முன், சென்னை, பொறியியற் கல்லூரியின் முத்தமிழ் விழாவில், பாவாணர் தலைமையில், இவர் பேசவந்த திருக்குறள் தொடர்பான தலைப்பையும் தவிர்த்து, அக்கூட்டத்தில், பொறியியற்கல்லூரியின் அப்பொழுதைய நெறியாளரும், தமிழ்ப் பகைவரும், சமசுக்கிருதப் பரப்பாளரும் பொறியியல் துறை வையாபுரியும் ஆன, காலஞ்சென்ற முத்தையன் இருந்தார் என்பதற்காகவும் அவரை மகிழ்விக்க வேண்டும் என்பதற்காகவும், 'எல்லா மொழிகளையும் ஒன்றாகவே கருத வேண்டும்; தமிழர்கள் இந்தியையும் படிக்கத்தான் வேண்டும்; சமசுக்கிருதத்தையும் படிக்கத்தான் வேண்டும்' என்று மெப்புதலாகப் பேசிவிட்டு

அன்று இரவு முத்தையன் வீட்டில் விருந்துண்ட நிகழ்ச்சியை நினைவு கூறுகையில் நம் முத்தமிழ்க் காவலரைப் பற்றி என்ன நினைப்பது? இடத்திற்கும் 'ஆளுக்கும் தகுந்தாற் போல் பேசி, அவர் இவர் என்னாத படி எவர்க்கும் இயைபாக நடந்து, தம்மை எந்தப் பதவியிலும், எந்தக் கூட்டத்திலும் தக்கவைத்துக்கொண்டிருக்கும் ம. பொ. சி. அளவிற்கு இவர் இறங்கிவிட மாட்டார் என்று நாம் நம்பினாலும், ஆரியப் பார்ப்பனரின் ஆதரவு இருந்தாலொழிய 'நாம் முன்னேற முடியாது' என்கிற அளவுக்கேனும் நெகிழ்ந்திருப்பார் என்றே ஐயுற வேண்டியிருக்கிறது. எஃது எவ்வாறாயினும் அவர் புதிதாகத் தொடங்கியிருக்கும் தமிழர் பேரவை தமிழ் மொழியையும் தமிழரையும் முன்னேற்றுவதில் உண்மையாகவே பாடுபடுமானால், நம்மை விட இருகைகள் நீட்டி வரவேற்று மகிழ்பவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது என்று உறுதியாகக் கூறுகிறோம். —பெருஞ்சித்திரனார்.

## வெட்கங் கெட்ட பேச்சுகள் !

### தமிழ்நாடு கொள்ளை போகிறது !

"தமிழகம் இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டு மாநிலமாக இருக்கிறது. இங்கே எல்லா மாநிலத்தவரும், சிறுபான்மை இனத்தவர்களும் அமைதியாக நட்பு முறையில் வாழ்கிறார்கள். தலைநகரில் ஆயிரக்கணக்கான பஞ்சாபியர்கள், சீக்கியர்கள், சிந்திகள் இராசத்தானிகள் (கோளத்தவரைச் சொல்ல மறந்து போனாரே!) மற்றும் பல மாநிலத்தவர்கள் வாழ்கிறார்கள். எல்லா மாநிலத்தவர்களும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் வாழ்கிறார்கள். தங்கள் தங்கள் ஊர்களில் வாழ்வது போன்றே உணர்கிறார்கள். எனவேதான் இந்திய ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் அமைதிக்கும் தமிழகம் ஓர் எடுத்துக்காட்டு மாநிலமாக விளங்குகிறது."

—தமிழகப் பொருள் அமைச்சர் கி. மனோகரன்.

(சென்னை, இராயப்பேட்டையில் பஞ்சாப் கழகத்தினர் நடத்தும் 'ஆதர்சய வித்தியாலயா மெட்ரிகுலேசன்' பள்ளியின் 24–ஆவது ஆண்டு விழாவில் 15—3—78இல் பேசியது.)

### சமசுக்கிருத மொழிக்கு ஆளுநர் சப்பைக்கட்டு !

"சமசுக்கிருத மொழியானது நமது கலை, கலையொழுக்கம், பண்பாடு, நெறிமுறை வாழ்க்கை ஆகியவற்றுக்கு அடிப்படை. இம்மொழியை வளர்க்க இம்மொழி வல்லுநர்கள் நல்ல ஈடுபாடுகொண்ட புதிய கலை முறையை உருவாக்க வேண்டும்; அம்மொழியின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்க வேண்டும்."

—மாநில ஆளுநர் பட்வாரி.

(சென்னை சமசுக்கிருத கல்லூரி ஆண்டுவிழாவில் 18—3—78-இல் பேசியது.)

# உலகியல் நூறு.

—பெருஞ்சித்திரனார்—

[மொழிபெயர்ப்பு: த. முத்துக்குமரன், க.இ.]

## 20. இறைமையியல்.

### 1. ஒருமை நிலை.

ஒன்றினுள் ஒன்று ஒடுங்கி உலகொடுங்கி
அன்றிரண் டென்னும் அணையாகி—ஒன்றுவே
என்றுமிருந் தெல்லாமாய் ஏர்ந்து விரிந்ததுவே
இன்றும் இயங்கும் இறை!

**பொழிப்பு:** ஆற்றலென்னும் அறிவுக் கூறுயும், விளங்கித் தோன்றும் பொருட்கூறுயும் பிரிந்தியங்கும் பல்வேறு இயக்க நிலைக் கூறுகளும், ஒன்றினுள் ஒன்றுகும்படி ஒடுங்கிப் போய், அதன்வழி உலக விரிவும் ஒடுங்குதலடைந்து, ஆற்றல் பொருள், என்னும் இரண்டு நிலைகளும் அல்லாத ஒரே நிலை என்னும் தன்மையாகி, ஒன்றுகவே ஊழித் தொடக்கம் வரை பொருந்தியிருந்து, பின் ஊழிக் காலத் தொடக்கத்தே இரண்டாயும் அவைவழி எல்லாமுமாயும் எழுந்து விரிந்து நிற்பதே, தொடக்கத்தும் முடிவினும் ஒன்றி நிற்கின்ற இறைமை என்பது. (96)

## 20. ON OMNIPRESENCE.

### 1. SINGULARITY.

One within one to shrink with world,
As two or more in kinetic fold.
Till end dissolves to expand more
Is omnipresent to be sure. (96)

What appear as force and intelligence in various material parts in various kinetic stages shrink one into one with the world for their contraction and expansion. In that stage in which force and matter appear as two or in that stage in which the two combine as one, they continue as such to the very end. Then at the end of 'ooli', the two that stand expanded as all at the beginning and at the end and that which aids their united existence is what we call the omnipresent.

## உ. இருமை நிலை

தான்பாதி நின்று தனிப்பாதி தான்விசும்பி
மீன்கதிராய்ப் பூதி மிளிர்ந்து— ஊனுடம்பாய்
உள்ளமாய்த் தான்றனையே ஊடுருவி நின்றின்ப
வெள்ளமாய் நின்ற விரகு.

பொழிப்பு; ஒன்ருகி நின்ற இறைமைக் கூறு முழுவதுமாய் விரிந்து விளங்காமல், தான் ஒரு பாதியாக என்றும் நின்று, தான் ஊடுருவி நின்ற மறுபாதியினின்று விசும்பி எழுந்து, பல்கோடி விண் மீன்களாகவும், கதிர்களாகவும் புடைந்து மிளிரத் துலங்கி, அவற்றினின்றும், பல்வேறு உயிர்க்கூறு பொருட்கூறுகளாப் பிரிதலுற்று ஊனுடம்பு பெற்ற பருவியக்கக் கூறுகளாகவும், அவற்றின் அகத்தே இறை வெளியாகவும், அகப்புறத்தே உள்ள வெளியாகவும், புறத்தே அறிவு வெளியாகவும், புறப்புறத்தே பூத வெளியாகவும் விரிந்து, எல்லா நிலையினும் தானே ஊடுருவி நின்று, இன்பநிலைத் துய்ப்பின் பெருக்கமாக என்றென்றும் பேரறிவும் பேராற்றலுமாய் நிற்கின்றது. (97)

## 2. ON PLURALITY.

Half self and other half in sky
As star and sun, bright and so high,
Parts to form flesh, body and heart
And permeates all joy to impart. (97)

That part of the omnipresent that stands as one does not mingle fully but only partly. It permeates through the other half, rises up to the sky to apper as the brilliant stars and rays of light, expands and shines. From these it parts as several life-parts and material parts embodied in flesh and blood and capable of motion It manifests istelf as innermost spiritual atmosphere, then as the inner atmosphere enveloping the previous, outwardly as intellectual light and further as atmosphere of the elwments. In this expansion, it permeates through all stages and is the enlargement of the supreme knowledge and power in the enjoyment of happiness for ever and ever

## ૩. உண்டிலை நிலை.

இறுத்தல் இறைமை இறுதிநிலை யாவும்
அறுத்துணர்வார் என்றும் அறிவார்—மறுத்தல்
பொருட்புலர்வு மற்ற தகப்புலர்வு போகா
மருட்பொருதல் ஆக்க மலிவு.

பொழிப்பு: என்றும் தங்கியிருத்தலே இறைமை என்பது. அதுவே அனைத்து நிலைகளுக்கும் இறுதியான மெய் நிலையாகும். வெளிப்பட விரிந்து நின்ற உயிர்க் கூறுகளையும் பொருட்கூறுகளையும் உள்ளுள்ளாகப் பிரித்து உணரத்தக்க நுண்ணறிவுடையோர் அனைத்துக்கும் முடிவாகிய இறையுளதாம் இத்தன்மையை அறிந்து உண்மை உணர்வர். அவ்விறைத் தன்மையை மறுத்துரைக்கும் தன்மை பொருட்கூறுகள் புலர்ந்து விரிகின்ற நிலைக்கு அடிப்படையானது. மற்று, அவ்விறைத் தன்மையை ஒத்துரைக்கும் தன்மை ஆற்றற் கூறுகள் மலர்ந்து கூர்கின்ற நிலைக்கு அடிப்படையானது. முடிவு பெறாத இவ்விரு அறிவு நிலைகளும் தம்முள் முரணி பொருதிக் கொள்ளும் தன்மையே இவ்வுலகின் உருவாக்க நிலைகள் நிறைந்து தோன்றுவதற்குரிய அடிப்படையாகும். *(98)*

## 3. ON THE 'IS-NOT' STAGE.

Resting's final omnipresence
This analyst can quickly sense.
Denial is matter combine;
Agreement is base for world fine. (98)

Omnipresence is resting for ever. That is the final true stage for all stages. Those endowed with the specialised knowledge to analyse and see the inner parts of all animate and inanimate objects will know this truth that finality everything rests on the omnipresence. Denial is the recognition of the fundamental basis for expansion of all material parts. Acceptance on the other hand is recognition of the basis for evolution of physical forces When these two in their immature stage are not in unison and oppose each other, we have these basis for the many worldly objects in their productive stage.

## 4. தெளிவு நிலை

மன்பொருள் யாவும் மனம்வாங்கும் ஒண்மனத்தை
முன்பொருளும் வாங்க முடியுமோ?—தென்படுபல்
புத்தாக்கம் எல்லாம் புலத்துணர்வே! ஆங்கதனின்
வித்தாகும் மெய்ம்மை விறல்

பொழிப்பு: வெளிப்பட்டு நிற்கின்ற பொருள்களின் அனைத்தின் அகப்புறத் தன்மைகளும் மன வாற்றலின்கண் வந்து படிவனவாகும். ஆனால், ஒளிர்ந்து விளங்கும் மனவாற்றலின் தன்மையை, நம் முன்னர் பருமையாய்ப் படிந்து நிற்கின்ற உள்ளுணர்வு சாராத உருப்பொருள்கள் உள்வாங்குதல் ஒல்லுமோ? ஒல்லாதென்க. புறத்தே பருப்பொருளாய்க் காணப்படுகின்ற, புதுவாய அனைத்து உருவாக்கங்களும், அருவாயமைந்த உணர்வினின்றும் அகத்தால் வாங்கி உருப்படுத்திய உணர்வின் புலப்பாடுகளே! அவை எல்லாவற்றின் மூலப் பொருளாகி நிற்கின்ற ஒன்றே இறைமையென்னும் சிறப்பினதாகும். (99)

## 4. ON CLARITY.

Mind takes in all objects. Can these
E'er know the mind? New things do trace
Their source to sense feelings, when sense
Its seed seeks from omnipresence. (99)

Mental forces easily take in the internal and external nature of all objects seen in the world. But can these objects before us in physical bodies but with no inward feeling, ever know the bright and true nature of mental forces? Certainly not. All earthly objects that appear new take their forms from the formless feeling and are but the outward expression of that feeling. That particular one which is the origin of all things is what is known as the Omnipresent.

## 5. ஒப்பு நிலை.

ஓவத் துணுக்கால் உருவறியார் ஒவ்வொன்று
மேவத் துடிக்கும் மிகை உருவம்—கூவநினைந்
தார்க்கே இசைமுடிவாங் கார்ந்திசைப்பார்க் கென்முடிவு
நீர்க்குண்டோ உண்மை நிறம்!

பொழிப்பு: பெரியதோர் ஓவியப் படத்தைப் பல்லாயிரங்கோடிக் கூறுகளாககிய நிலையில், அவற்றின் ஒவ்வொரு கூற்றையும் கொண்டு, முழுவுருவையும் முன்பு கண்டறியாதவர்கள், தாம்தாம் பெற்ற அறிவுணர்வுக்கும் உளவுணர்வுக்கும் மெய்ப்பொருளுணர்வுக்கும் ஏற்றவாறு, தாமே ஓருருவத்தைக் கற்பித்துக் கொணடு, அவ்வுருவநிலைக்குத் தமக்குக கிடைத்த ஒரு துணுக்கின் கூற்று வடிவத்தைப் பொருத்துகின்ற மிக விரிந்த கற்பிதங்களே இக்கால் உள்ள இறை உருவங்களும் அவற்றின் புறச்சாயைகளான சமையங்களும். ஒலிப்புலனால் ஏதாமோர் ஒலியை உண்டாக்க நினைத்தவர்களுக்கே இறுதி முடிவாக இசைநிலை கைவரப் பெறும். ஆனால் இசைநிலை கிடைக்கப் பெற்ற ஒருவர்க்கு இறுதி முடிவாக, இவ்வுலகின்கண் இயங்கும் வரை, அவ்விசையே முடிவல்லது வேறு முடிவு ஏது? நீர்க்குத் தான் இயல்கின்ற இடத்தானும் காலத்தானும் பொருட்புணர்வாலும் கொள்ளுகின்ற நிறமேயல்லாது, இயல்பின ஒரு நிறமில்லையாதல் போல, இறைமை, தன்னை வெளிப்படுத்தி நிற்கும் உயிர்க்கூற்றானும் பொருட்கூற்றானும், வடிவமெய்துமேயன்றி, தனக்கென்று ஒரு வடிவத்தைப் புலப்படுத்தாதாம் என்க. (நீர்க்கே நிறமில்லாயின் அதனின் பலநிலை கடந்த ஒன்றிற்கு உருவம் சமைக்க எங்ஙன் ஒல்லுமென்க) (100)

(முற்றும்)

## 5. ON SIMILARITY.

Those who know not portrait in full
Picture many forms content to fill.
Music expert sticks to best note;
Colourless water they do quote. (100)

When they that have not fully seen the big portrait and see later only in many million fragments try to imagine the full picture from the fragments on hand, their image will be in proportion to their intelligence, feeling and knowledge. As such, it will be only an imaginary enlargement of the figure in the fragment on hand. Such are their impression of the omnipresence or the outward shadow of religions. Only those keen on the sense of sound that can achieve success in the final stage. The music expert reaching the zenith takes his favorite and best note as the basis as long as he lives. That is the final and there can be no other. Just as water has no colour of its own but the one that it acquires in accord with the time, place and the matter with which it combines, the Omnipresent has no form of its own but that of the living and material parts that display it. (FINIS.)

# மார்க்சும் - மறைமலையாரும்.

புலவர் தி. நா. அறிவுஒளி, க.மு.

தனித்தமிழியக்கத்தின் தெளிந்த அரசியற் குறிக்கோள் பொதுமைக் குமுகாயத்தை மலர்வித்தலேயாகும்.

தனித்தமிழியக்கத்தினை ஏனோ பொதுமையர் பிறழவுணர்ந்து வீணான அலர் உரைத்து வருகின்றனர்.

மொழித் துறையில் கலப்புச் செய்வது பிற்போக்கு முதலாளியத்தின் கீழ்மையான 'குரங்குப் போர்' முறையாகும்.

பண்பாட்டினை வீழ்த்தும் முதற்பணி மொழித்துறையில் 'கலப்பினை' வற்புறுத்துவதாகும்.

'காரல் மார்க்சு' அவர்கள், தூயமொழி நடையில்தான் எழுதினார். மொழி மரபு, இலக்கண நெறி ஆகியவற்றைப் பேணுவதில் மிகவும் உறுதியோடு வாழ்ந்தார். அத்தகு காரல் மார்க்சின் நெறியில் இயங்குவதாகக் கூறுவோர், தனித்தமிழியக்கத்தினைப் போற்றவும் பாராட்டவும் வேண்டும். மார்க்சின் இயல்புபோலத் தாமும் தூய தமிழ் நடையில் எழுதவும், இலக்கண நெறியை, மரபைப் போற்றி யொழுகவும் வேண்டும்.

மறைமலையடிகளார் தமிழ் மொழியின் மறுமலர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியவர்.

ஆயின், இவ்விருவர்தம் மொழித்துறைக் கொள்கை ஒரு நோக்குடையதாக அமைந்திருக்கும் நுட்பம் ஆழ்ந்தறியத் தக்கதாகும்.

உவில்லியம் இலீப்க்னெட்டு என்பார் காரல் மார்க்சோடு மிக நெருங்கிய உறவுடைய தோழர் ஆவார். அவருடைய எழுத்திலும் பேச்சிலும் மார்க்சின் தூயமொழி நடைக் கொள்கையும், மொழி இலக்கணத்தைப் போற்றிய இயல்பும், மொழி மரபினைக் காத்து மதித்துப் பின் பற்றிய பண்பாடும் தெளிவாகிறது.

மார்க்சினைப் பற்றிய இலீப்க்னெட்டு எழுதியுள்ள பகுதிகள் இவையே :

(நான் படித்த நூலின் மொழிபெயர்ப்பாசிரியரின் தொடர்களை ஆங்குள்ளவாறே எழுதியுள்ளேன். கீழுள்ள தொடர்கள் எனது மொழிபெயர்ப்பன்று.)

"மொழி விடயத்தில் விதிகளின் அடிமை என்று சொல்லத் தக்க அளவுக்குத் தூயவாதியாக இருந்தார் மார்க்சு".
(மார்க்சையும் ஏங்கெல்சையும் பற்றிய நினைவுக் குறிப்புகள் : ப:149)

"எண்ணங்களை விளக்குவதில் தூய்மைக்கும் பிழையின்மைக்கும் மிக மிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார் (மார்க்சு)"

"மொழியில் தூய்மையும் பிழையின்மையும் சம்பந்தப்பட்ட வரையில் அவர் (மார்க்சு) மிகவும் அறநுட்பத்தோடு நடந்து கொண்டார்". (ஷ : ப ; 154-5)

"மார்க்சு தூயநடை வாதி; சரியான விளக்கத்திற்காக அவர் நீண்டநேரம் மிகவும் சிரமப்பட்டுத் தேடியலேவார். அனுவசியமாக அந்நியமொழிச் சொற்கள் பயன்படுத்தப் படுவதை அவர் வெறுத்தார்."

"மார்க்சின் படைப்புகளில் சுயமான சுத்தமான செருமன் வார்த்தை அமைப்புகளும் உபயோகங்களும் அமோகமாகக் காணக்கிடக்கின்றன".

"தமது வாழ்க்கையில் ன்றில் இரண்டு பகுதியினை அந்நிய நாடுகளில் அவர் கழிக்க நேர்ந்திருந்த போதிலும் செருமன் மொழியில் அவருக்குப் பெரும் ஆற்றல் இருந்தது. இம் மொழியின் தலைசிறந்த நிபுணராகவும் படைப்பாளியாகவும் அவர் விளங்கினர்". (ஷி : ப : 155)

வேற்றுமொழி நாடுகளில் பல ஆண்டுகள் வாழ வேண்டி நேர்ந்தும் காரல்மார்க்சு அவர்கள் தூய செருமன் மொழி நடையில் எழுதிப் பேசி வந்தார் என்னும் உண்மை நிலையைத் தமிழர் யாவரும் தெள்ளத் தெளிவாக உணர்தல் இன்றியமையாததாகும்.

இவர் கூறிய கூற்றுக்கேற்பவே மறைமலையடிகளாரின் மொழி நடைக் கொள்கையும் தூய்மையைப் போற்றுவதாகும்.

"சொற்களையும் பொருள்களையும் தூயவாக்கி வகுத்தலே நூல்யாக்குமுறை யென்பதனைச் சிறிதும் ஆய்ந்து பாராத இஞ்ஞான்றைக் கதை நூற்காரர்கள் வட சொல்லும் ஆங்கிலச் சொல்லுங் கொச்சைத் தமிழ்ச் சொல்லும் விரவிய மிகச்சீர்கெட்ட நடையில் அவை தம்மை வரைந்து நூன்மாட்சியினைப் பாழ் படுத்துகின்றனர். நாளேற நாளேற அறிவுஞ் செயலுஞ் சீர்திருந்தி வளர்வதற்கு ஏற்ற உயர்ந்த முறையில் எழுதப்படுங் கதை நூல்களையே பயிலல் வேண்டுமல்லால் இத்தகைய வழுஉக் கதைகளைப் பயிலல் நன்றுகாது.

(கோகிலாம்பாள் கடிதங்கள்–முன்னுரை–ப : 20)

என எழுதிய அடிகளார் அறிவுரை மார்க்சின் நடைமுறைக் கொள்கைக்கு ஒத்ததேயன்றோ?

இலக்கணம், மொழி மரபு, தூயநடை, இலக்கிய மரபு, தமிழ் நெறி ஆகியன மக்களுக்கு ஆக்கமளிப்பனவென்னும் உண்மையைத் தெளிதல் வேண்டும்.

உலகப் பேரறிஞர்களான மார்க்சும், மறைமலையாரும் மொழி நடைக்கொள்கையில் எத்தகு ஒற்றுமையுடையவராய் விளங்கு கின்றனர் என்பதை ஆய்ந்து தெளிந்தால் வீண்பூசல்கள் மறையும்.

மொழிநலமே மக்கள் நலமாம்; மக்கள் நலமே மொழி நலமாம்.

# தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்புகள்.

பன்மொழிப்புலவர்: **இரா. மதிவாணன், க.மு.**

## 2. தமிழ்ப் பண்பாட்டின் வரையறை.

பண்பாடு என்பது உலக மாந்தரின் மன நோய்க்கு மருந்து; அமைதியான இன்ப வாழ்வுக்கு விருந்து. பண்பட்ட உள்ளத்தோடு யார் யார் வாழ்ந்து காட்டுகிறார்களோ அவர்களெல்லாம் பண்பாட்டை வளர்த்துக் காக்கும் புரவலராகின்றனர். மாத்யூ ஆர்னால்டு என்பவர் "ஒருவன் தன் பண்பு நலன்களை நிரப்புவதிலும் தன்னைச் சூழ்ந்த குமுகாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலையே பண்பாடு" என்றார். மனம் பண்பட்ட ஒவ்வொரு நிலையுமே ஒவ்வொரு பண்பாட்டுக் கூறாகும். ஆங்கிலத்திலும் Cultivate (பண்படுத்து) என்னுஞ் சொல்லிலிருந்தே Culture (பண்பாடு) என்னும் சொல் தோன்றியது.

'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்று கலித்தொகை பண்பாட்டுக்கு இலக்கணம் வகுக்கிறது. இதற்குப் பிறரியல்பறிந்து இயைந்து ஒழுகுதல் எனப் பொருள் கொள்வது சிறப்பாகப்படவில்லை. நற்பண்பினர் கொடுமனத்தவனின் தீமைக்கு உடன்பட்டு வாழ்வது பண்பாடாகாது. எனவே, பாடறிந்து ஒழுகுதல் என்பதற்குப் பெருமைதரும் வகையறிந்து ஒழுகுதல் எனப் பொருள் கொள்வதே சிறந்தது. 'சொல் வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க' என்றும், 'மக்களே போல்வர் கயவர்' என்றும், 'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர்' என்றும், 'நன்றாற்றலுள்ளும் தவறுண்டு' என்றும் பாடறிந்தொழுகும் இயல்பை இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப வள்ளுவர் வகுத்துரைப்பது காண்க. பாடறிந்தொழுகும் இயல்பை அறியாத நல்லவன் தீயவரால் ஏய்க்கப்படுவான்; மாய்க்கவும் படுவான். இத்துணை நுட்பமாகப் பண்பாட்டை வரையறுத்த தமிழ்மரபின் முன்னோரை வியந்து பாராட்டாமலிருக்க முடியாது.

நன்கு பண்படாத உள்ளப் பாங்கின் வெளிப்பாடுகளான பழக்க வழக்கங்கள், ஒழுகலாறுகள், நடைமுறைகள் ஆகியவற்றைப் பண்பாடு என்று சொல்வது தவறு. நீலமலை வாழ் துதவரிடைப் பல் கணவ முறை (ஒருத்தி பல ஆடவரை மணப்பது) இருப்பின் அதனை அவர்களின் ஒழுகலாறு என்று சொல்லலாமே ஒழிய, இந்தியப் பண்பாடு என்றோ திராவிடப் பண்பாடு என்றோ சொல்லலாகாது. பண்பட்ட உள்ளத்தின் ஒழுகலாறு மட்டும் பண்பாடு எனப்படல் வேண்டும். ஆப்பிரிக்கப் பண்பாடு ஆத்திரேலியப் பண்பாடு எனப் பொதுமக்களின் மேம்போக்கான நடைமுறை ஒழுகலாறுகளை—

அவை எத்துணை மூடநம்பிக்கை நிறைந்தனவாயினும்—பண்பாடு என்னும் சொல்லால் குறிக்கும் தவற்றைச் சில மாந்தனூலாரும் வரலாற்றுசிரியரும் செய்து வருகின்றனர். இவற்றைப் பண்பாடு (culture) எனச்சுட்டாமல் நடைமுறை (way of life) எனச்சுட்டும் வழக்கத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். மலைவாழ்நர் அனைவரும் நாகரிகமும் பண்பாடும் பெற்ற நம் நேர் முன்னோரான தொன் முதுகுடிகளின் வழிவந்தவரல்லர். போர், வறுமை, பகைமை ஆகிய வற்றால் காட்டில் புகலிடம் பெற்ற மறவர் பலர் இல்லறம் நடத்த விழைந்தபோது, ஆங்கு ஒரே பெண் கிடைக்கக் கூடுமாயின், வேறு வழியின்றியும் புறவுலகத்தோடு தொடர்பு கொள்ளமுடியாத நிலையிலும் பல்சணவ முறையாகிய பெருந்திணையொழுக்கத்தில் ஈடுபட நேர்வது இயல்பு. அவர்களின் வழிவந்த மரபினரும் முன்னோர் சென்ற நெறியென்னும் மூடநம்பிக்கையால் பல்கணவ நெறிக்கு வாழ்வு தந்திருப்பர். இதனை வரலாற்றுசிரியரும் மாந்தனூலாரும் உய்த்துணரவேண்டும்.

இலக்குவன்மீது ஐயுற்ற சீதையை விட எடுக்கவா கோக்கவா என்று வினவிய துரியோதனின் பண்பட்ட உள்ளத்தை மெச்சுகிறோம். தனக்கு ஒரு தீங்கும் நினையாத பாண்டவரின் துணைவி பாஞ்சாலியைத் துகிலுரிந்த துரியோதனனைவிட தன் தங்கையின் மூக்கரிந்த பகைவரைப் பழிக்குப் பழிவாங்க சீதையின் மூக்கரியாமலும் தீங்கு செய்யாமலும் சிறைக் காவலிருத்திய இராவணனின் பண்பட்ட உள்ளத்தைப் போற்றுகிறோம் தன் எதிரிகளை மலை முகட்டிலேற்றிப் பட்டினியிட்டுக் கொன்ற ஐதர் அலியைவிட தன்னிடம் தோற்றுலும் வீரத்திற்காக மெச்சி போரசை மன்னனாக நடத்திய அலெக்சாந்தரின் பண்பாட்டைப் புகழ்கிறோம். ஆதலால், பண்பாடு என்பது உயர்ந்த உள்ளங்களினின்றும் அகழ்ந்தெடுக்கப் படவேண்டிய வயிரமணி. சால்புநிறை புலமக்களின் தனியுடைமை அதனைப் பொதுமக்கள் என்னும் புறவெளியில் அனைவரிடத்திலும் தேடமுடியாது பொதுமக்கள் அனைவரையும் உயர்பண்பாடு வாய்ந்த பொன்மனச் செம்மல்களாக மாற்றும் முயற்சி கைகூடினால் பொதுமக்கள் அனைவரிடமும் அதனைக் காணக்கூடும்:

பொதுமக்கள் அனைவரையும் பண்பாட்டுச் செம்மல்களாக்கத் தமிழ்முன்னோர் மேற்கொண்ட முயற்சியின் முதற்படிக்கல்தான் குடிப்பெருமை[1] என்பது. பிறரால் நன்கு மதிக்கப்படுதலை விரும்பு

1. குடிப்பெருமை என்பது தனித்த ஒருகுடுபத்தின் பெருமை அன்று. தமிழ்க் குடிப்பெருமை-தமிழினப்பெருமை அதனுற்ருன வணிகக் குடிப் பெண்ணான கண்ணகி, வெவ்வேறு குடிகளைச் சார்ந்த ஏழு கண்புடைமகளிரின் குடிப்பெருமைகளையும், அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்த சோழக்குடிப் பெருமையையும் தமிழ்க் குடியின் ஒட்டுமொத்தப் பெருமையாகச் சுட்டிக் காட்டுகிருள்.

வதே குடிப்பெருமையை வளர்க்கும் வழி. ஆரியர் தம் பிறப்பும் தோற்றமுமாகிய புறக்கோலத்தால் நன்கு மதிக்கப்பட்டனர். பண்பட்ட உள்ளமாகிய அகக்கோலத்தால் தமிழர் நன்கு மதிக்கப் பட்டனர். அயர்லாந்தின் இருபதாண்டு வரலாற்றில் ஒருவன் மட்டும் சிறையிடப்பட்டிருந்தானும், வாடிகன் நகரில் சிறைச்சாலைகள் வறிதே கிடக்கின்றனவாம். காரணியம் என்னவென்று வினவிய போது அம்மக்கள் குடிப்பெருமையைப் பெரிதாகக் கருதுவதால் உயர்பண்பாட்டினராய் விட்டனர் என்றனராம். தமிழரனைவரும் குடிப்பெருமையைப் பெரிதாக மதித்த மரபினர் என்பது கடைக்கழக இலக்கியங்களால் தெரிகிறது. திருந்திய பண்பாடு வாழ்வின் குறிக் கோளாக அமைகிறது. அஃது உயாவு மனப்பான்மையை வளர்க் கிறது. இவையே குடிப்பெருமையாகின்றன. குறிக்கோள் வெற்றி பெறும்போது புகழ் குவிகிறது. உயர்வு மனப்பான்மை செருக்காக மாறுமல் தன்னடக்கமாகக் கனிகிறது. செல்வமும் அதிகாரமும் வாழ்வின் குறிக்கோளாகும்போது பண்பாடு கெடுகிறது. குமுகாயம் துன்புறுகிறது, அதனுற்றான் குடிப்பிறந்தார் குன்றுவ (குடும்பப் பெருமையைக் குறைக்கும் செயல்களைச்) செய்யலாகாது என தமிழ்ப் பண்பாட்டை வரையறுததனர். உன் நலன், உன் குடும்பநலன்களை விட குடும்பத்தின் பண்பாட்டுப் பெருமை பெரிது என ஒவ்வொரு தமிழனுக்கும் உணர்த்தப்பட்டது. ஓர் ஆறலைக் கள்வனின் குடும்பத் தொழில் கொள்ளையடிப்பது. கல்லாத அவன் தான் தமிழ்குடியைச் சார்ந்தவனென்றும் ஈகையும் விருந்தோம்பலும் குடிபெருமைகள் (தமிழக்குடியின தலைமைப் பண்புகள்) என்றும் கேள்வியறிவாலாவது உணர்வுபெறின் தன் தீத்தொழிலை விட்டொழி வான்; பாடறிந்தொழுகும் பண்பினன் ஆவான். தமிழ்ப் பண்பாடு என்னும் குடிவழிச் செலவத்தைத் தமிழர் அனைவர்கரும் பகிர்ந்து தராதது காலத்தாலும் அறியாமையாலும் நேர்ந்த இடையூறு.

தமிழர் பாடறிந்தொழுகும் பண்பினர் என்பதற்கு மற்ரொரு சான்றும் காட்டலாம். கடவுளைத் தூயவரென்று கருதிய தமிழர் மலர்போன்ற தூயவற்றுல் வழிபட்டனர். தமக்கு விருப்பமானவற் றைப் படைக்காமல் தம்மிடமுள்ளவற்றில் பெருமைக்குரியதைப் படைப்பது தமிழர் நோக்கம். இதுவே பாடறிந்தொழுகும் இயல்பு. தமக்கு விருப்பமானவற்றைப் படைப்பது ஆரியர் வழக்கம். ஆதலால் தாம் வழிபடும் தெய்வங்களுக்கு ஆரியர் தீயிடை புலால் சொரிந்து வழிபட்டனர். இதனுற்றான் திவாகர நிகண்டு ஆரியரை மிலேச்சர் என்கிறது. தமிழர் முழுமுதற்பொருளை நீரொடு பூச்சொரிந்து வழி பட்டனர். இதுபற்றியே ஆரியரைப் புலால் வழிபாட்டினர் என்றும் தமிழரைப் பூ வழிபாட்டினர் என்றும் கூறுவர். தமிழர் நிலத் தெய்வங்களான கொற்றவை, சேயோன் போன்ருர்க்கு உயிர்க்சாவு தந்தனராயினும் முழுமுதற் கடவுளான சிவனுக்கு அங்ஙனம் செய்தாரல்லா.] ஆரியரின் புலால் வழிபாட்டிற்கும் தமிழரின்

பூ வழிபாட்டிற்கும் அவரவர் உள்ளம் பண்பட்டிருந்த படிநிலைகளே அடிப்படையாயின என்று தெரிகிறது. ஆரியப் பண்பாடு கலந்த பின்பு தமிழர் பண்பாட்டில் மாறுதல்கள் ஏற்பட்டன.

## பண்பாட்டின் படி நிலைகள் :

தன் பெண்டு தன் பிள்ளை யென்றுவாழும் கடுகினுஞ் சிறிய உள்ளங்கொண்டவன் தன் குட்டிகளை மட்டும பேணும் விலங்கியல்பி லேயே நிற்கிறான். மனைவி மக்களைக் காப்பாற்றாமல் குடித்தும் கூத்தாடியும் நெறிகெட்டலையும் கயவனும், தன்னையே பேணிக் கொள்ளாத பேதையும் விலங்கினும் இழிநத நிலையில் நிற்கின்றனர். இவ்விருதிறத்தாரின் உள்ளங்களும் அறவே பண்படவில்லை.

தன் இல்லத்தாரேயன்றி உற்றார் உறவினரையும் நாட்டோரை யும் காக்கும அன்புள்ளத்தவன் மாந்த நிலையின் முதற்படியிலிருக் கிறான். தன்னைச்சாராத பிறர்க்கும் நன்மை செய்யத் துடிப்பவனும் பொதுநல வாழ்வில் கருத்தூன்றிய அருளாளனும் முழுமையான மாந்த நிலையில் நிற்கின்றனர். பகைவனுக்கும் தீங்கு செய்யாமல் நன்மை செய்ய நினைக்கும் பேரருளாளன் மாந்த நிலையிலும் மேம்பட்ட தெய்வப் பண்பினனாகிறான்.

மாந்தரின் உள்ளத்தை விலங்கியல்பிலிருந்து மீட்டு தெய்வப் பண்புக்கு உயர்த்துவதே பண்பாட்டின் நோக்கம். பண்பாட்டின் படிநிலைகளைக் கடந்து உயர்ந்த சான்றோரின் வாழ்வை இலக்கிய மாக்கி மாந்தரனைவர் உள்ளத்திலும் அன்பைச் சுரக்கச் செய்யும் முயற்சியே பண்பாட்டை வளர்க்கும் முயற்சி. இதனை நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே என்று பண்டையோர் குறித்தனர். பண்பாட்டு வளர்ச்சியில் அரசனின் பங்கு பெரிது எனக்கருதப்பட்டது.

## பண்பாடும் நாகரிகமும் :

பண்பாடு மனவளர்ச்சியைக் காட்டும், நாகரிகம் அறிவு வளர்ச்சியைக் காட்டும். பழக்க வழக்கம், நம்பிக்கை, ஒழுகலாறு ஆகியவை மனவளர்ச்சியின் புறக்கோலங்கள் எனினும் பண்படாத

---

1. புறநானூறு 312ஆம பாடலில் நன்னடை நல்கலைத் தண் ணடை நல்கல் எனப பாடவேறுபாடு தந்துகாட்டுவது பொருந் தாது. வேல் வடித்துக் கொடுத்தவுடனே தண்ணடை (மருத நிலவயல்) தருவரோ? களிறெறிந்து பெயர்ந்த பின்னன்றோ வேந்தன் தண்ணடை தருவான். தண்ணடை நல்குவதாயின 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக கடனே' என்னும் வரிக்கு அடுத்துத் தண்ணடை நல்கல் வேந்தர்க்குக் கடனே வந்திருத் தல் வேண்டும் என்பதை உன்னுக.

உளப்பாங்கின் வெளிப்பாடுகளும் இவற்றில் கலந்திருக்கக் கூடுமாதலின் இவற்றைப் பண்பாடு எனக்கூறமுடியாது. நடையுடை, உண்டி, வாழ்க்கை நலங்கள், கலைத்துறைகள் ஆகியவை நாகரிகத்தின் வெளிட்பாடுகள். நகரத்தில் தோன்றியது நாகரிகம். Civilis (நகரம்) என்னுஞ் சொல்லிலிருந்து தோன்றிய Civilization என்னும் ஆங்கிலச் சொல்லும் இப்பொருளின்தே. புறத்தூய்மையுடையவர் நாகரிகம் வாய்ந்தவர். அகத்தூய்மை வாய்ந்தவா பண்பாட்டாளர். திருவள்ளுவர்

*'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க*
*நாகரிகம் வேண்டு பவர்'* —(580)

என்னும் குறளில் இரண்டையும் ஒன்றுகக் கூறுகிறுர் என்பர். நாசரிகம் தனியாகவும் பண்பாடு தனியாகவும் பிரித்தறியப்படும் நிலைமையிருக்கும்வரை நல்லவனுக்கும் தீயவனுக்கும் வேறுபாடு கண்டறிய முடிவதில்லை. நாகரிகமில்லாத பண்பாட்டாளரைப் பொறுத்துக் கொள்ளலாம். பண்பாடில்லாத நாகரிகத்தவரைப் பொறுத்துக் கொள்வது எப்படி? நாகரிகம் கொடிகட்டிப் பறக்கும் நகரத்தில் பன்மாட வளமனையில் வாழுஞ் செல்வனுக்கும் மண் குடிசையில் வாழும் பண்பாளனுக்கும் உள்ளார்ந்த நட்பும் உறவும் வளர முடிவதில்லை. ஆயின் தமிழர் பண்பாட்டில் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும் உயிர்நட்பு மலர முடிந்தது. இதன் கரணியம் யாதெனின், பண்பாட்டுக்கே முதலிடம் கொடுத்து வந்த தமிழினம் புற நாகரிகம் பெருகிய காலத்திலும் அக நாகரிகமாகிய பண்பாட்டையே நாகரிகத்தின் உயிராகக் கருதியது.

*அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்*
*குற்ற மறையா வழி* —(846)

என்னும் குறளிலும் வள்ளுவர் இதே கருத்தை வலியுறுத்துகிறுர். உள்ளத்தின்கண் அருவருப்பானவற்றை மறைத்துக்கொள்ளும் பண்பாடு பெருமல் உடம்பின்கண் அருவருப்பானவற்றை மறைக்க ஆடை உடுத்திக்கொள்ளும் புற நாகரிகத்தால் யாது பயன் என்றுர். புறநாகரிகம் பளிச்சென வெளியில் தெரிகிறது. அக நாகரிகம். (பண்பாடு) வாய்ப்பு நேரும்போது மட்டும் புலப்படுகிறது. பண்பாடும் நாகரிகமும் வேறு பிரித்தறியப்பட கீழ்க்கண்டவை கரணியங்களாயின.

| | பண்பாடு | நாகரிகம் |
|---|---|---|
| 1. | அன்பொழுக நோக்கும் நோக்கில் புலப்படும் அமைதி | செருக்கை வளர்க்கும் போக்கில் புலப்படும் ஆரவாரம். |
| 2. | மெதுவாகப் பரவும்; நிலையாயிருக்கும். | விரைந்து பரவும்; அடிக்கடி மாறும். |
| 3. | உள்ளத்தைப் பண்படுத்தும் | உள்ளத்தைக் களிப்புறுத்தும். |
| 4. | புதுப்புனைவு கொள்ளாது | புதுப்புனைவு கொள்ளும். |

| | |
|---|---|
| 5. பொதுநலம் வளர்க்கும் | தன்னலம் வளர்க்கும். |
| 6. பண்பாடு தழுவிய ஒழுகலாறு மக்களை இணைக்கும் | புறநாகரிகம்தழுவிய ஒழுகலாறு மக்களைப் பிரிக்கும். |
| 7. உயர்ந்த பண்பாட்டாளரே பண்பாட்டை வளர்க்கமுடியும் | புற நாகரிகத்தை எவரும் வளர்க்கலாம். |
| 8. இருவேறு இனத்தாரின் நாகரிகம் கலக்கும்போது பண்பாடு கலக்கத்தயங்கும். | பல்வகை நாகரிகங்கள் கண் மூடித்தனமாகக் கலந்து விடும். |
| 9. புற நாகரிகம் இல்லாத பண்பாட்டால் தீமையில்லை | பண்பாடு தழுவாத நாகரிகத்தால் அளவிறந்ததீமைபெறும். |
| 10. பண்பாட்டு முதிர்ச்சி உலகத்தைக் காக்கும் | புற நாகரிகம் தனித்து வளர்ந்தால் உலகத்தை அழிக்கும், |
| 11. இலக்கியத்தாலும் கலையாலும் போற்றிக் காக்கப்படும் அருஞ்செல்வம். | செல்வத்திற்கு அடிமையான அறிவின் கண்டுபிடிப்புகள். |

பண்பாடு தாய். புறநாகரிகம் மனைவி. தாய் உயிர்கொடுத்தும் மகனைக் காப்பாள். கணவனை உயிர்கொடுத்தும் காக்கும் தாய்மைப் பண்பில்லாத மனைவி பேய். தாயுள்ளம் கொண்டவளே உண்மையான மனைவி. பண்பாட்டை முழுமையாகத் தன்னகத்தே பெற்றதே உண்மையான நாகரிகம் என்று நாகரிகத்துக்கு இலக்கணம் கண்டது தமிழர்களின் அரிய கண்டுபிடிப்பாகும். புற நாகரிகம் தனித்து வளரவிடப்பட்டால் பண்பாட்டை அழிக்கும் முரணை இயல்பைப் பெற்றுவிடும் என்னும் கண்டுபிடிப்பு வியந்து போற்றத்தக்கதாகும். அதனாற்றான் நாகரிகம் புற நாகரிகத்தைக் குறிக்காத வண்ணம் அதனைப் பண்பாட்டுப் பொருளில் பயன்படுத்தினர் நம் முன்னோர்.

இன்றைய நாகரிகம் எனும் சொல் பழந் தமிழர் நோக்கில் புற நாகரிகமே. பண்பாடு அகநாகரிகம்; இரண்டும் கலந்தது நாகரிகம். இரண்டுங் கலந்த தமிழர் நாகரிகத்தில் அக நாகரிகம் மேலோங்கி நின்று புற நாகரிகத்தின் செருக்கையொடுக்கி நலம் விளைப்பதாயிருந்தது.

பண்பாடும் அறவுணர்வும் :

திருந்திய மனப்பாங்காகிய பண்பாடு அனைவராலும் பாராட்டப்படும். ஆயினும் உள்ளுணர்விலாத அனைவராலும் பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கமுடியாது. அனைவராலும் பின்பற்றப் படவேண்டும் என்று வற்புறுத்தும்போது அஃது அறமாகிறது; பொதுமக்களின் ஒழுகலாறு குறித்த வாழ்க்கை சட்டமாகிறது பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் அறநெறிப் பகுப்பில்

இடம் பெறுவதில்லை. பண்பாடு தனியொருவனிடம் காணப் படும் புதுமை. அறவுணர்வு அனைவரிடமும் எதிர்பார்க்கப் படும் பொதுமை. உள்ளுணர்வும் அறிவும் காட்டும் வழியில் மனச்சான்று (மனசாட்சி) நடக்கும்போக்கே அறம். இதனை அனை வரும் ஏற்றேயாகவேண்டும் என்னும் கடப்பாடு உண்டு. இதன்படி அனைவரும் (உறுதிபூண்டால்) வாய்மையாளராகவும் நன்னெறியின ராகவும் மாறிவிட முடியும். அறக்கோட்பாடுகள் சிலவாக இருத்த லின் தெளிவாக உணர்த்த முடியும். இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்பப் பண்பட நடக்கும் பண்பாட்டு நெறிகள் பலவாதலின் அனை வரையும் உயர்பண்பாட்டாளராக்கும் முயற்சி எளிதன்று. இவ்வரிய முயற்சியில் தமிழர் கருத்தூன்றினர். பண்பாடு வெல்லும்போது அறமும் வென்றுவிடுகிறது.

அறவுணர்வு உள்ளத் தூய்மையை வளர்க்கும். உள்ளத் தூய்மையோடு பிறர் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவ்வுள்ளங் களைத் தம்பால் ஈர்ப்பது பண்பாடு. அறம் தன்னளவில் தன்னைக் காத்துக் கொள்வதால் பிறரை ஈர்க்காது. ஈர்ப்பதாயின் அற நெஞ் சிலாதார் பெருகியிரார் அன்றோ. பண்பாடு ஈர்க்கும் தன்மைத் தாத லின், "நீ வளர்த்த புன்னை மரம் உன் உடன் பிறந்தாள்" என்று தாய் சொல்லக் கேட்டு, அப்புன்னை மர நிழலில் காதலனுடன் நகையாடி மகிழ தமிழிலக்கியத் தலைமகள் நாணுகிறாள். (நற் : 172)

அறஞ்செய்ய நினைப்பவன் நன்மை செய்யாவிடினும் தீமை செய்யாமலிருந்தால் போதும்; அறப் பயன் பெறுவான். பண் பாளன் பிறர்க்கு நன்மை செய்தேயாக வேண்டும். பண்பாட்டின் பயனைப் பிறர்க்குச் சேர்த்தேயாக வேண்டும். அறம் அனைவர்க்கும் தாய். பண்பாடு என்பது தொடர்புகொண்டபின் பயன் நுகர்விக்கும் உரிமை மனைவி. தமிழ்ப்பண்பாடு நாகரிக முரண்பாட்டாளரையும் பொறுத்துக் கொள்ளும். அவர்களை நண்பராகவோ பகைவராகவோ கருதாமல் நொதுமலராகக் கருதும். இம்மைசெய்தது மறுமைக்கு ஆகும் என்னும் அறவிலை வாணிகனாக வள்ளல் ஆய் விளங்கவில்லை என்பதை நாம் அறிவோம். ஆரியர் அறமே உலகை உய்விக்கும் என்றனர். அறம் பண்பாட்டின் உட்கூறு என அறிந்ததால் உலகை உய்விப்பது பண்பாடே என்றனர் தமிழர். இல்லறத்தில் அன்பு பண்பாகும் அறம் பயனாகும் என்று வள்ளுவர் கூறியதும் இப்பொருட்டே.

**பண்பாட்டின் நோக்கமும் பயனும்:**

அன்பு, நாண் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நடுவுநிலைமை போன்ற உயர் பண்புகளை வளர்ப்பது பண்பாட்டின் நோக்கம். இஃது உலக மக்கள் அனைவர்க்கும் உடன்பாடான பொது நோக்க மாதலின் இதனைத் தமிழர்ப்பண்பாடு எனப்பிரித்துப் பேசுவதில் பொருளுண்டா என வினவக்கூடும்.

உலகிலுள்ள மக்களினத்தார் பலரும் அவரவர் உள்ளம் பண்பட்ட படிநிலைகளுக்கேற்ப பண்பாட்டை வரையறுக்கும் முறை வெவ்வேறாக இருக்கிறது. சான்றாக. பொன்னும் பொருளும் பெற்று வேள்வி செய்தும் தவஞ்செய்தும் தாம் துறக்கம் பெறுவதே ஆரியர்க்கு வாழ்வின் குறிக்கோளாயிற்று. தமிழர் மேலுலகம் இல்லெனினும் ஈதலையே குறிக்கோளாகக் கொண்டனர். ஆரியரின் மனவளர்ச்சி தந்த பண்பாடு பொதுநலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு பொலிந்தது. ஆதலின், உலகிலுள்ள பல இனத்தாரின் பண்பாடுகளினின்றும் தமிழ்ப் பண்பாட்டைச் சிறப்பித்துக் கூற வேண்டியுள்ளது. தமிழர் தம் பண்பாட்டை வரையறுத்த முறை நம்மை ஈர்க்கிறது. தமிழ்ப்பண்பாடு உலகம் முழுவதும் பரப்பப்பட்டால் உலகம் செம்மையுறும் என்று நம்புகிறோம்.

குற்றங் குறையில்லாத மாந்தன் இல்லை. குறையுள்ளவனுகப் பிறந்தவனை அஃது அவனது தலையெழுத்து என்றுகூறாமல் நிறையுள்ளவனாக மாற்றும் பயிற்சியே பண்பாடு. இப் பயிற்சியில் முயற்சி செலுத்திய காலத்தில் தமிழ்ப்பண்பாடு ஒப்புயர்வற்றதாக விளங்கியது.

தமிழ்ப்பண்பாடு உலகந்தழுவிய பண்பாடு. கொடுப்போர் ஏத்திக் கொடார் பழித்தல் என்னும் புறத்துறை செல்வர்க்கும் ஏழைகட்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் போக்கும் பொதுவுடைமைக் கருத்தின் ஆணிவேரன்றோ! பொதுவுடைமைக் கொள்கை ஒருசிலர் உள்ளத்தில் முதன் முதல் முகிழ்த்தது. அவர்கள் அரும்பாடுபட்டு அதனைப் பரப்பியதால் அது நாடுமுழுவதும் பரவியது. உயர்ந்த பண்பாடுகள் தமிழ்ப் பெருமக்களின் உள்ளத்தில் அரும்பின. அவற்றை அனைத்து மக்களுள்ளத்திலும் மலரச்செய்து பயன்கொள்ள உழைப்பவர்களின்

எண்ணிக்கை பெருகவில்லை. உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும் தாய்மொழி கற்கத் தூண்டிய மன்னரை பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பின் காண முடியவில்லை. கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகக் கீழ்ப்பால் ஒருவன் கூடக் கற்கமுடியவில்லை. கல்வி யென்னும் கண்ணைப் பறித்துக் கொண்டபின் பண்பாடு என்னும் நன்னீரூற்றைத் தேடிப்போவது எங்கே? எல்லோரையும் கற்கத் தூண்டிய பாண்டியனையும், சூத்திரன் வேதம் ஓதினால் நாக்கை யறுக்கும் ஆரியப்பண்பாட்டையும் ஒப்பு நோக்குக. பழந்தமிழர் பண்பாட்டைச் சமயத்தின் உடைமையாக்கவில்லை. பண்பாட்டைப் பண்பாடாகவே வளர்த்தனர். சமயஎல்லைக்குள் அதனை உலவவிட்டால் பிற சமயத்தாரை அன்பொழுக நோக்க முடியுமா? மூட நம்பிக்கை களுக்குட்படாமல் நல்லன அனைத்தையும் தேர்ந்து கடுமையாக உழைத்துப் பிறர்க்கென வாழ்ந்து புகழ்பட வாழ்தலைக் குறிக்கோ ளாகக் கொண்ட தமிழ்ப்பண்பாடு உலகமக்களுக்கு வழிகாட்டியாகும்.

தமிழ்ப்பண்பாடு சால்புடைமையில்போய் நிற்கிறது. உள் ளத்தைப் பண்படுத்துவது பண்பாடு. பண்பட்ட உள்ளத்தை அதன் நிறையுடைமையினின்றும் குன்றாமல் காப்பது சால்புடைமை. ஒரு பண்பு குறைந்தாலும் சால்புடைமை நிலையாது. சால்புடைமைக்கு ஊறு நேர்ந்தால் பழந்தமிழர் உடனே உயிர் நீப்பர். இத்தகைய உயர் பண்புகளைத் தமிழினம் மரபுவழி உறுதிப்பாடாகப் பெற்றிருந் தது. உள்ளத்தைப் பண்படுத்துவதில் தமிழர்கள் உலக முன்னோடி களாய் விளங்கியிருக்கிறார்கள் என்பதை 'யாதும் ஊரே யாவரும் கேளிர்! என்னும் பொன்னுரை இன்றளவும் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

தமிழர் பண்பாடு எனின் காலந்தோறும் நிலவிய தமிழர்களின் உளப்பாங்கு எனப் பொருள்படுமாதலின், காலந்தோறும் நிலவிய உளப்பாங்குகளில் தமிழினத்திற்கு என்றும் பெருமை சேர்க்கும் நிலைத்த இயல்பினவற்றைத் தமிழ்ப்பண்பாடு எனச்சுட்டல் தகும். சமயங்கடந்த பொதுநலன் தமிழ்ப் பண்பாட்டின் நோக்கம். வாழ்வாங்கு வாழ்தல் அதன்பயன். (தொடரும்)

---

'ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்' —என்னும் மருத்துவ இயல் கட்டுரையும் 'நூற்றுசிரியம்'— தொடர்ச்சியும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வரும்.

# மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்.

புலவர். இறைக்குருவனார்.

## முத்தப் பருவம்.

41

தெண்டிரைப் பொன்னிசூழ் தண்டலையில் இனமுற்ற
தேன்வண்டு பண்மிழற்றித்
தெளிதமிழ்ப் பெருநலங் காட்டுமுயர் [1]வேளூரில்
[2]சித்தர் அமுதக்கரையினில்
ஒண்டொடித் [3]தையலொடு [4]வேம்படியின் நீழலில்
உறுபிணிகள் தீர்ந்துவையம்
உய்வுகொள மேற்கெழுந் தருளியுள உவமையில்
உயர்மருத்[5] துவனையுன்னிக்
கொண்டபிணி தீர்ந்துநீ தொண்டுசெய வாழ்வுறு
குறிப்புணர்ந் துள்ளமுருகிக்
கொழுமலர்ச் செய்யவடி இணைபோற்றி யிருநிலங்
கொள்ளவொரு பதிகவடிவில்
எண்டிசை யரும்புகழ் தண்டமிழ்ப் [6]பாவோதும்
எழில்வாயின் முத்தமருளே!
ஏற்றமிகு பாவாணர் போற்றிடுந் திருவாள
எழில்வாயின முத்தமருளே!

42

செவ்வையாய்ச் சொற்பொருள் உணர்ந்துநெஞ் சுருகிநற்
செம்பொருளை இனிதுபோற்றிச்
சிறப்புமிகு வழிபாடு செய்துயர் மாட்டாது
சிறுமையே யுறுவேமெனத்

---

41—1. வேளூர் - புள்ளிருக்கு வேளூர் - வினை தீர்த்தான் கோயில் (வைத்தீசுவரன் கோயில்)
2. ஷ்டி திருக்கோயிலில் உள்ள திருக்குளம் சித்தாமிர்தம் என்னும் பெயருடையது.
3. தையல்-தையல் நாயகி-ஷ்யூர் அம்மன்.
4. வேப்பு-ஷ்யூர்த் திருக்கோயில் மரம் (தல விருட்சம்)
5. மருத்துவன்-மருத்துவப் பெருமான்-இறைவன்.
6. பா-மறைமலையடிகளார் இயற்றிய புள்ளிருக்கு வேளூர்ப் பதிகம்.

தவ்வனைக்[1] கூச்சலாய்ச் செவியுறப் பெற்றவர்
தமக்கன்றியும் விள்ளுவார்
தமக்குமொரு பொருளுணர்வு தாராத வடமொழித்
தகவில்வழி பாடுசெய்தே
எவ்வளவு பயனுமறி யாததமிழ் மக்கட்(கு)
இனிக்குங் கரும்பிருக்க
இன்னாத வேம்புநுகர் கின்றமை விளக்கி[2]—நன்(கு)
ஏலுமறி வுரைவழங்கி
எவ்வமில் இருந்தமிழில் இறைவனடி போற்றுநின்
எழில்வாயின் முத்தமருளே!
ஏற்றமிகு பாவாணர் போற்றிடுந் திருவாள
எழில்வாயின் முத்தமருளே!

## 43

நீற்றவன் திருவருள் போற்றுநல் லடியவர்
நிறைதமிழ் ஆய்வுவல்லார்
நெடுநாள் நினைந்துசெய் பேரரு முயற்சியால்
நெடியபுனல் கெடிலமென்னும்
ஆற்றினுக் கணிசெயும் [1]பாதிரிப் புலியூரில்
அப்பர்கரை யேறவிட்டார்[2]
ஆங்கவர் திருமுன்பில் ஓங்குமா நாடென
அணிதிரண் டினிதிருப்ப
விற்றுநற் றலைவனும் வியன்பழஞ் செந்நெறி
விளங்கிநீ டூழிவாழ
வேண்டிய திருத்தங்கள் தீரமா னித்தாண்டு
வீங்குபுகழ் ஞானி[3]மகிழ
ஏற்றநிறை பேருரை யாற்றியருள் செய்யுநின்
எழில்வாயின் முத்தமருளே!
ஏற்றமிகு பாவாணர் போற்றிடுந் திருவாள
எழில்வாயின் முத்தமருளே!

---

42—1. தவ்வனை-தவளை.
2. "கரும்பிருக்க வேம்பு நுகர்வார் போல" என்பது அடிகளார் தமது திருவாசக விரிவுரையில் கூறியுள்ள உவமை.

43—1. திருப்பாதிரிப்புலியூர்.
2. கரையேறவிட்ட பெருமான் என்பது ஷியூரில் இறைவன் பெயர். 3. திருப்பெருந்திரு ஞானியாரடிகள்.

44

முந்தைநாள் ஆலால சுந்தரன் கயிலையில்
முறைபிறழ்ந் திருமாதரை
முன்னிய பிழைக்கந்த கன்னியர்கள் தம்மொடும்
மும்மைநீர் சூழுலகினில்
வந்தாய் ஆரூரர் முற்பிறவி வரலாறு[1]
வரைந்துளது பொய்யாமென
வண்டமிழ்ச் சேக்கிழார் விண்டிலர் இதுவென
வையகம் மிகவியந்து
பொந்திகை யுறப்பல விளக்கங்கள் தருக்கின்ற
பொருவரிய பேரறிவினுல்
போற்றுமா தொண்டர்தம் வரலாற்று மாட்சிப்
புலப்படுத் துந்திறத்தால்
எந்தமை ஆட்கொள்ளும் முந்துதமிழ் சிந்துநின்
எழில்வாயின் முத்தமருளே!
ஏற்றமிகு பாவாணர் போற்றிடுந் திருவாள
எழில்வாயின் முத்தமருளே!

45

ஊனையுரு கச்செயுங் [1]கேட்டாரு மறியாத
ஒண்டமிழ்ப் பாவெடுத்தே
உலகுளம் உவந்திட இலகுதமிழ் மாமறை
உரையான் விளக்கிமற்றும்
ஆனைமுகன் ஆறுமுகன் வருபிறப் பிவையென
அறிவிலியர் தாங் கேட்பினும்
அறவெறுப் புறநின்ற தரமிலாக் கதைகளின்
அளவிலாப் பொல்லாங்கெலாம்
பானையுறு தயிரினிற் புக்கமத் தேயெனப்
பாறுறச் செய்துஞாலம்
பார்க்கநிற் கின்றவத் திருவுருப் பொருளெலாம்
பாங்குற விளக்கியருளி
ஏனையவ ருந்தமிழ் வேணவா கொள்விக்கும்
எழில்வாயின் முத்தமருளே!
ஏற்றமிகு பாவாணர் போற்றிடுந் திருவாள
எழில்வாயின் முத்தமருளே!

---

44—1. சுந்தரரின் முற்பிறவி வரலாறு முதலியன இடைச்செருகல் என்பதனை அடிகளார் பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் என்னும் தமது நூலில் விளக்கியுள்ளார். ஷெ நூல் திருப்பாதிரிப்புலியூர் மாநாட்டுத் தலைமையுரையும் அதன் மேலெழுந்த தடைகட்கு விடையுமாம்.

45—1. "கேட்டாரு மறியாதான்" என்பது திருவாசகப் பாடல். கடவுள் நிலைக்கு மாறுபட்ட கொள்கைகள் சைவம் ஆகா. (திருச்சி மாநாட்டுத் தலைமைப் பொழிவு நூல்)

# தமிழர்தம் அகத்திணை வாழ்வில் அழுக்கா?

புலவர் பொன். முகிலன்.

தென்மொழி சுவடி 14, ஓலை 10-இல் திரு. பூங்காவனம், க மு., அவர்கள் 'கைவிடப்பட்ட மனைவிகளும் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளும்' என்னும் திரு. இரா. மதிவாணன அவர் களின் கட்டுரைக்கு (தென்மொழி சுவடி 14, ஓலை 7) இருதடைகளைக் குறிப்பிட்டிருந்தார்கள். அத்தடைகட்கு திரு. இரா. மதிவாணன் அவர்களின் விடை யாதாக இருப்பினும், எனது கருத்தை இங்குத் தெரிவிக்கின்றேன்.

'சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டு கொல்'' என்ற சிலம்பின் வரியைக் கூறி 'இயல்பாக இலலாவிடினும் அருகிய அளவிலேனும், கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் பண்டைத் தமிழ் நாட்டில் உண்டல்லவா? என்பது முதல் தடை.

வடமொழி இலக்கியங்களில் கூறப்படும் 'கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கும்' தமிழச் சிலம்பில் கூறப்படும் 'ஈன்ற குழவியை எடுத்து வளர்க்கும்' முறைக்கும் வேறுபாடுள்ளது. வடமொழி இலக்கியங்களில் காணப்படும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகள் எவ்வகையிலேனும் பிறந்திருக்கலாம். அதுமட்டுமன்று, யாரும் எளிதில்காணாத இடத்தில்போடப்பட்டுக் கண்டெடுக்கப்படும். ஆயின், தென்மொழி இலக்கியங்கள் காட்டும் 'எடுத்து வளர்க்கும் குழந்தைகள்' கற்பியல் நெறியில் பிறந்தவையே.

எவ்வாறெனில், மணிமேகலையில் கற்பின் மூன்று நிலைகள் கூறப்படுகின்றன. கணவன் இறந்தவுடன் மனைவியும் இறப்பது ஒன்று. இரண்டாவது தீப்பாய்தல். மூன்றுவது கைம்மை நோன்பு நோற்றல். (மணி : 2)

இம் மூன்று நிலைகளில் கைம்மை நோன்பை மேற்கொள்வதன் அக்கால முதன்மை நோக்கம், தங்கள் குழந்தைகளை வளர்க்கும் பொருட்டே. இதற்குப் புற நானூற்றின் 23-ஆம் பாடலும்; மணி மேகலையில் மாதவியின் கூற்றும் (மணி : 2) சீவக சிந்தாமணியில் விசயையின் புலம்பலும் (சிந் : 1801) தக்க சான்றுகும்.

மூன்றில் ஒரு நிலைக்கு மேற் கூறியவை சான்றுவதால், மீத முள்ள இரு நிலைகளில் உயிர்விடும் பெண்களின் குழந்தைகளைக் காப்போர் யார்? இவ்வகையில் கணவனோடு மாய்ந்துவிடும் பெண் களில் எல்லோருக்கும் நெருங்கிய சுற்றத்தார் இருப்பர் என்று எவ்வாறு கூறமுடியும்? மாய்ந்த பெற்றோரின் குழந்தைகளை எடுத்து வளர்க்கும் நெருங்கிய சுற்றத்தார் இல்லாதவிடத்து, அவ்வூரில் உள்ள சான்றோர்கள் தாமே அக் குழந்தைகளைத் தாங்கி வளர்த்தல் வேண்டும்?

இத்தகைய சான்றோரைத்தான் மதுரையிலே கண்ணகி 'உண்டு கொல்' என்று கேட்டாள். இவ்வாறு கற்பியல் வாழ்க்கை வாழ்ந்த பெற்றோர்கள் ஈன்ற குழந்தைகள் ஏதிலிபாகும்போது அவர்களைச் சான்றோர்கள் எடுத்து வளர்த்தனர் என்பதையே சிலம்பும், பிற செந்தமிழ் இலக்கியங்களும் காட்டுகின்றன.

இதற்கோர் அருமையான சான்றைக் குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

"கருங்கண் தாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்.
—குறுந் : 69.

இப்பாடல், இயற்கைமேல் வைத்துக் காட்டிய நிகழ்ச்சி தமிழ்மக்கள் வாழ்வில் நிகழ்ந்ததுதான் என்பதில் ஐயமில்லை.

அடுத்து, வையாவிக் கோப் பெரும்பேகன் தன் மனைவியாகிய கண்ணகியைக் கைதுறந்த நிகழ்ச்சி. இது 'கைவிடப்பட்ட மனைவி' என்ற கூற்றிற்குத் தமிழ் இலக்கியம் காட்டும் சான்றாக உள்ளதே என்பது திரு. பூங்காவனம் அவர்களின் இரண்டாவது தடை. எ(இ)ங்கும், வடமொழி இலக்கியப் போக்கிற்கும், தென்மொழி இலக்கியப் போக்கிற்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு.

அஃதாவது ,வடமொழியினர் பெண்களை வெறும் நுகர்ச்சிப் பொருளாகவும், விலங்கிற்கு ஒப்பாகவும் கருதினர். தென்மொழியினரிடம் இவ்வகையில் அமைந்த குறை பரத்தையர் பிரிவேயன்றி, முற்றிலுங் கைவிட்டோடும் குற்றம் ஈங்கில்லை. (ஆயின், தமிழ்மறை-யாய்ப் பிறந்து தானே உலகப் பொதுமறையான வள்ளுவம் இதனையும் குற்றமென்றே கூறும்.) இதனை திரு. இரா. மதிவாணன் அவர்கள் தம் கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளார்.

பேகன்-கண்ணகி கைதுறப்பு பரத்தையர்ப் பிரிவேயன்றி கைவிட்டோடல் அன்று. எவ்வாறெனின், பேகன் கண்ணகியை எண்ணாமல் நல்லூர்ப் பரத்தையுடனேயே தங்கினான். கண்ணகியைத் தன் அரண்மனையைவிட்டுத் துரத்திவிடவோ, விரட்டிவிடவோ இல்லை. நாடோடி வாழ்க்கை தமிழர்க்கு என்றும் இல்லையாதலால் விட்டோடல் என்ற நிலையும் இல்லை.

மேலும் பேகனைக் காணச்சென்ற புலவர்கள் எல்லாம் அவன் அரண்மனைக்குச் சென்று கண்ணகியைக் கண்டபின்தான் மன்னனின் பரத்தமையை அறிந்து அதனைத் திருத்தும் முயற்சியை மேற்கொண்டனர். இதனை "வாயிற் றோன்றி வாழ்த்தி நின்று, நின்னுநின் மலையும் பாட" (புறம் : 143) என்ற கபிலர் கூற்றும்; "நின் காரெதிர் கானம் பாடினேன்" (புறம் : 144) என்ற பரணர் கூற்றும்; 'நின்வன்புல நன்னாடு பாட" (புறம் : 146) என்ற அரிசில் கிழார் கூற்றும் காட்டும்.

"மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி" ஆதலால், அக் காலச் சான்றோர்களாகிய புலவர்களால் மன்னன் பரத்தையன் ஆவதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. அது அவன் தனிப் பட்ட வாழ்க்கை மட்டுமன்று, நாட்டு வாழ்வையே தாக்கக்கூடியது. அதனால்தான், கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க் கிழார் ஆகிய ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களாகிய பெருமக்கள் உடனே சென்று அவன் பரத்தமையை நீக்கும் பணியை மேற் கொண்டனர்.

எனவே, பேகன் செய்த பிழை பரத்தமையேயன்றி, வடமொழி இலக்கியங்கள் காட்டும் 'கைவிட்டோடல்' அன்று.

"சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய" என்ற தொல் காப்பியமும் (கற் : 13) "நம்மூர்ப் பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ?" என்ற குறுந்தொகைத் (146) தலைவியின் கூற்றும், பிரிந்து செல்வதும், பின் கூடுவதும் தமிழிலக்கிய வழக்கு என்பதைக் காட்டும். இத்தகைய பரத்தையர்ப் பிரிவை வடமொழி கூறும் கைவிட்டோடலுக்கு நிகராகக் கூறலோ– கொள்ளலோ பொருந்தாதன்றோ?

இறுதியாக, "அகத்திணை, கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை, என்ற தலையாய குறியீடுகளுக்குக் கூட அன்பும் அறமும் அல்லாத விளக்கங்கள் எழுதுவதும், கற்பிப்பதும் ஒரு மரபு போல வந்திருத்த லின், 1500 ஆண்டுகளாக அகத்திணையின் உண்மையும் பொதுமையும் ஒழுங்கும் புதைகுழிப் பட்டன. தமிழ் கண்ட தன்னேரில்லாத அகத்திணையின் இடைக்கதை இவ்வாறாயிற்று. ஆதலின், உண்மையைக் கண்டு தெளிதற்குக் கழகப்புலவர் ஒரு சிலரையோ, ஒருசில கழகப்பாடல்களையோ ஒரு சோற்றுப் பதம் போல் பார்ப்பது தகவாகாது" என்ற பர். வ. சுப. மாணிக்கம் அவர்களின் ஆய்வுரையைக் கூறி இதனை முடிக்கின்றேன்.



## வயிர மூக்குத்தி

- ஆசிரியர்: இறைக்குருவனார்.
- தென்மொழியில் தொடர்ந்து வெளிவந்து நேயர்களைக் கவர்ந்தது.
- மொழி நூல் மூதறிஞர் பாவாணர் அவர்களின் அணிந் துரை கொண்டது.
- வரலாறு தழுவிய பாவியல் நாடகம். விலை: உருபா. 2-00.

கிடைக்குமிடம்:

ஆசிரியர், இறையகம்,
2, மேற்கு அரசர் தெரு
சென்னை-600016.

தென்மொழி புத்தக
விற்பனை நிலையம்,
சென்னை-600005.




*அச்சாகும் நூலெல்லாம் நூலாமோ ஆங்குசிலர்*
*மெச்சியுரை செய்வதனுல் மேலாமோ—முச்சில்*
*புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோருய்ப்*
*படைத்துவிட லாமோ பசிக்கு.*

(நூல் நிறைக்கு வந்துள்ள நூல்கள் சில. இவற்றுள் சில அடுத்துவரும் இதழ்களில் நூல்நிறை செய்யப்பெறும்).

1) பாவேந்தர் ஊட்டிய தமிழுணர்வு: ஆசிரியர். க. தமிழ -மல்லன். விலை: 0-60 காசு. தொடர்பு முகவரி: பொ. கண்ணையன்; 168. மாரியம்மன் கோயில் வீதி, தட்டாஞ்சாவடி. புதுச்சேரி-605009.

2) திருக்குறளில் அறிவு: ஆசிரியர். பேரா. ப. சு. மணியம் விலை: 8-00. கிடைக்குமிடம்: அருட்கலைக் கழகம், கோவை-1.

3) 1. கண்ணுக்குக் கண்ணுக: விலை: 6-00. வெளியீடு: செல்வ நிலையம், 53. முத்து முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.
   2. அவனுக்காக: விலை: 7-50.
   3. சக்கர வாகம்: விலை: 7-50.
   வெளியீடு: அருணோதயம், இராயப்பேட்டை. சென்னை-14.
   4. உண்மை உறங்குகிறது: விலை: 8-25. வெளியீடு: தேவி நிலையம், இராயப்பேட்டை, சென்னை-14.
   —மேற்கண்ட நான்கு நூல்களும் புதினங்கள். ஆசிரியர்: மாரி. அறவாழி.

4) அருவி: (பாடல் தொகுப்பு): ஆசிரியர்: கு. சந்திரசேகரன். விலை: குறிக்சப் பெறவில்லை. கிடைக்குமிடம்: குமரன் அச்சகம், சீரமங்கலம்-614624. புதுக்கோட்டை மாவட்டம்.

5) புலவர் அந்தோனிக்குட்டி அண்ணுவியார் அவர்கள் எழுதிய நூல்கள்.

   1. ஞானத்திருப்புகழ்: விலை: 2-50. கிடைக்குமிடம்: சுவாமி ஏ. மரியதாசு, கத்தோலிக்கு ஆலயம், திருப்பத்தூர்-623211 கோவை மாவட்டம்.

   2. ஆபத்துப் பத்து, ஆசைப் பத்து, கீர்த்தனைகள்: மூன்றும் விலை: குறிக்கப் பெறவில்லை.

   3. பச்சாதாபம்: விலை குறிக்கப் பெறவில்லை.

4. ஆராதனைப் பிரகாசம், அருள் வாசகம்: விலை குறிக்கப் பெறவில்லை. கிடைக்குமிடம்: திரு. எசு. மிக்கேல். வி. வி. எசு (ஐயர்) தெரு, தாம்பரம், சென்னை-600059.

5. பேரின்பக் காதல், திருப்பாலத் தியானம், யேசு நாதர் மரணம்: விலை குறிக்கப் பெறவில்லை. கிடைக்குமிடம்: எம். பி. டிமல், எம்.ஏ., 38. சிவன் வடக்குரத வீதி, பாளையங்கோட்டை.

6. நசரைக் கலம்பகம்: ஆசிரியர். வித்துவான். சாமிநாதப் பிள்ளை. விலை குறிக்கப்பெறவில்லை. வெளியீடு: எசு. மிக்கேல், வி. வி. எசு (ஐயர்) தெரு, கணபதிபுரம், தாம்பரம், சென்னை —600059.

7. தாராட்டுமாலை: சிப்பிகுளம் வித்துவான் சவேரியா பிச்சைக் கொறேரா: விலை குறிக்கப் பெறவில்லை. கிடைக்குமிடம்: தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி-620001.

8. மாயூரம் விற்பன்னர் வேதநாயகர் இயற்றிய, பெரியநாயகி அம்மன் பதிகம், தேவமாதாவந்தாதி, தனிப் பாடல்கள் சில, மாணிக்க மாலை. முதலியவற்றின் தொகுப்பு: விலை குறிக்கப் பெறவில்லை. வெளியீடு: எசு, மிக்கேல், வி. வி. எசு (ஐயர்) தெரு, கணபதிபுரம், தாம்பரம். சென்னை-600 059.

9. இசுலாமிய வாழ்க்கை முறை: ஆசிரியர். அபுல் அஃலா மௌதூதி; தமிழாக்கம்: கே. கே. எசு. அப்துர்ரஃமான். விலை: 2-50.

10. The Message of Islam. ஆங்கில வெளியீடு. ஆசிரியர் Maulana Abdul Ala Moududi. (Paper read at the International Islamic Conference, London, April, 1976.) விலை குறிக்கப் பெறவில்லை.

மேற்கண்ட இரண்டு நூல்களும் கிடைக்குமிடம்: தமிழ்நாடு இசுலாமிய நிறுவனம். 2F/2. தகியுத்தீன்கான் தெரு, சென்னை-600 005.

---


## "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 24 உருபா | 24 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 12 ,, | 12 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

# மக்களவை

## தமிழர்தரும் வரிப்பணம் இந்திக்குச் செலவிடப் பெறுகிறது!

**ம: 220.** தனித்தமிழ்க் காவலர் பாவலரேறு அவர்கட்கு வணக்கம்! மக்கள்கட்சி நடுவணரசை அமைத்த பிறகு, ஆரிய நச்சுச் செடியை இந்தியா முழுவதும் நீரூற்றி வளர்த்து வருவது தெரிந்ததே. வடவர்கள் பல குழுக்களாசப் பிரிந்து, பல தலைவர்களின் கீழ் மிகவும் சுறுசுறுப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். ஒவ்வொரு வரும் ஒவ்வொரு துறைக்குப் பொறுப்பேற்று ஆரியப் பண்பாட்டினையும் இந்தியையும் புகுத்தி வருகிறார்கள். கூலிப்பட்டாளத்தில் அனைவரும் இந்தி பயில வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே இந்தி மயமாக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் சகசீவன்இராம், கழிந்த நவம்பரில் பாது காப்புக் கிழமை (சைனிக் சமாச்சார்) இதழில் வேண்டுகோள விடுத்துள்ளதைத் தொடர்ந்து, படிவங்கள், கட்டளைகள் எல்லாமே இந்தியில் நடைபெற்று வருகின்றன.

உள்துறை அமைச்சகத்தைப் பொறுத்த மட்டில், எல்லாத் துறைகளிலும் இந்தியை வெகு விரைவில் புகுத்தி விட்டதாகப் புள்ளி விளத்தம் கூறுகிறது. இந்திய இருப்புவழித்துறை பற்றிச் சொல்லவே தேவை இல்லை. இந்திய அஞ்சல் துறை ஆரியத் தலைவர்களுக்குத் தொடர்ந்து நினைவு அஞ்சல் தலை வெளியிட்ட வண்ணம் அவர்களின் புகழை நிலைநாட்டி வருகிறது. இவர்களைப் பற்றி வரலாறே கிடையாது 1) SUN, 2) KING AGGRASON, 3) JOTIRAO PHOOLEY, 4) GANGARAM, 5) SATRAPATY SIVAJI, 6) MOTHER PONDYCHERY இன்னும் எண்ணிறந்த, முனிகள், சந்நியாசிகள் இன்னும் இவர்கள் போன்றவர்களுக்கும், இராவணனை இழிவு படுத்துகிற மாதிரியும் அஞ்சல் தலைகளை வெளியிட்டு வருகிறார்கள்.

வடமாநிலங்களில் உள்ள அஞ்சலகங்களில் பயன்படுத்தப்படும் முத்திரைகளில் (Stamps) எல்லாப் பெயர்களும், ஊர்களும் இந்தியி லேயே பொறிக்கப் பட்டுள்ளன. ஆங்கிலம் ஆங்கு அறவே நீக்கப் பட்டுவிட்டது. தமிழ்நாட்டில் இயங்கும் அஞ்சலகங்களில் உள்ள முத்திரைகளில் பாதி இந்தியிலும் பாதி ஆங்கிலத்திலும் பொறிக்கப் பட்டுள்ளன. சென்னையில் அஞ்சல் செய்யும் ஒரு கடிதம் மதுரையில் வழங்கப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். சென்னையில் அடிக்கும் முத்திரையில் Madras என்று ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருக்கும். எந்த ஊரில் அஞ்சலாயிற்று (Posted) என்பது எங்களுக்கு எப்படித் தெரியும்? (ஆங்கிலம் தெரிந்து இருப் பது வேறு செய்தி.) எழுத்தறிவு நிரம்பப்பெறாத ஏழை எளிய

வர்கட்கு இது எவ்வாறு புரியும்? இந்திக்காரர்கள் கொடுக்கும் வரிப் பணம் இந்தியில் முத்திரை பதிக்கப் பயன்படுகிறபோது, தமிழர் கொடுக்கும் வரிப்பணத்தை ஏன் தமிழில் முத்திரை பதிக்கப் பயன் படுத்தக் கூடாது? உலக நாடுகள் அனைத்தும் அவ்வவற்றின் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் முத்திரைகளைப் பொறிப்பதுபோல் ஏன் இங்குச் செய்யக்கூடாது? நெற்றி வெயர்வை சிந்தத் தமிழர் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்து கோடி கோடியாக இந்திக்குக் கொட்டியழ, இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது. தமிழர்கள் வரிப்பணம் தமிழுக்கே செலவிடப் பெறுதல் வேண்டும். திரு. மா. கோ. இராவின் தலைமையில் உள்ள தமிழக அரசும் 5 கோடித் தமிழர்களின் மானச் சிக்கலாகக் கருதி, இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது, கலைஞர் தலைமையில் இருந்த அமைச்சரவை, தந்தை பெரியாருக்கு அஞ்சற்றலை வெளியிட இருந்தது. அப்போது உள்துறை அமைச்சராக இருந்த "பிரம்மானந்த ரெட்டி" "இதைப்பற்றி எண்ணுவதற்கு இப்போது காலம் இல்லை யென்றார்" இப்போது மறு ஆய்வு செய்வதாகத் தெரிவித்துள்ளார்கள். நடுவண இந்திவெறி, மதவெறி பிடித்த ஆரியக்கும்பல்கள் இன்னும் என்ன என்னவோ செய்ய இருக்கிறார்கள். எனவே தலைக்குமேல் வெள்ளம்போன பிறகு சாண் போனால் என்ன முழம்போனால் என்ன? என்றநிலை ஏற்பட்டுவிடக்கூடாது. இப்போதுள்ள தமிழக அரசும் தன் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ளவே செய்கிறது. கூடிய விரைவில் ஆரியத் தம்பிரான்களும், அடிவருடிகளும் திரவிடத்தை விலைபேசக் காத்திருக்கின்றனர். பள்ளியில் வகுப்புகள் முடிந்த பிறகு, விருப்பமுள்ளவர்கள் இந்தி பயில 5/- இலக்கத்தை ஒதுக்கி யுள்ளனர். போகின்ற போக்கைப் பார்த்தால், எழுதவே முடியவில்லை. இதற்கிடையில் தி. நகரில் வைணவப் புரட்டர்கள் ஒன்றுகூடி, சமசு கிருதத்தை எல்லாக் கோயில்களிலும் ஓதுவிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர். அப்போதுதான் 'பகவானுக்கு' காது கேட்குமாம்! அது மட்டுமல்லாமல் காசுமீரம் முதல் கன்னியாகுமரி வரை ஒருமைப்பாடு ஏற்படுமாம். தமிழ்நாட்டில் இருக்கிற கற் சிலைகளுக்கு வடமொழியில் சொன்னால்தான் காதில் ஏறுமா? தமிழில் சொன்னால் ஏறாதுபோலும்! பிறகு தமிழ் நாட்டில் ஏன் இருமொழிக் கொள்கை? மூன்றாவது மொழியாகச் சமசுகிருதத்தை ஏற்று, அதைப் பள்ளிகளில் பாடமொழியாக்க வேண்டுமென்று திரு. மா. கோ. இராவைக் கேட்டுள்ளார்கள். நான்காவது மொழியாக இந்தியை ஏற்றுக்கொள்ளவும் வேண்டுமாம்!

ஆக "இனப்புரட்சி" வெடித்தாலொழிய இவர்களின் கொட்டங் களை அடக்கமுடியாது. திரட்டுங்கள் படையை! கொட்டுங்கள் போர்முரசை! "ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்" குறள்-763,

—மு, செகந்நாதன், கல்கத்தா.

## நெஞ்சத்து அவலம்!

ம: **221:** எனது பேரன்புக்கும், பெருமதிப்பிற்கும் உரிய பெருமகனுர்க்கு வணக்கம்.

தாங்கள் ஈரோட்டில் விதைத்த விதைகள் மிகச் சிறந்த நாற்றங் கால்களாய் வளர்ந்துள்ளன. ஈரோட்டில் தங்களின் ஒப்பிலா, மிகச் சிறந்த உண்மை ஆய்வின்பாற்பட்ட சொற்பொழிவை நினைந்து நினைந்து மகிழ்ந்து மனம் நெக்குருகிச் செவிக் கொண்டவரில் பெரும் பான்மையோரில் மிகச் சிறந்த நாவலர் பலர்; எழுத்தர் பலர்; சிந்தனை யாளர் பலர். தாங்கள் ஊட்டிச் சென்ற அறிவுப் பாலினைப் பருகி யவர், அதன் பலனைப் பலர்க்கும் உரைத்து வருகின்றனர்; கேட்டவர் வியக்கின்றனர். தாங்கள் ஈரோட்டில் நாற்றங்கால்களுக்கு வித்திட்டு விட்டுச் சென்றுள்ளீர்கள். அதன் பயன் வெளிப்பட்டுக் கொண்டுள் ளது. இன்று தமிழனுக்கு வழிகாட்டப் பண் பாட்டுடன் விளங்கும் தமிழ்மகன் இல்லையே!—என்ற கவலை நீங்கும் அளவிற்குத் தங்கள் பணிகள், செயல்கள், பேச்சுகள், எண்ணங்கள் திகழ்கின்றன. அஃதே நாங்கள் பெற்ற பேறு.

ஆயினும் சிந்தனையில் ஒரு கீறல் இருக்கத்தான் செய்கிறது. தமிழ்த தலைவர்களை ஓரணியில் என்று காணபது என்பதுதான் புரியாக் கவலை. தமிழுணர் வில்லாத தலைவர்களைப் பற்றி நான் சிந்திக்க வில்லை. தமிழுணர்வுள்ள தலைவர்களைப் பற்றித்தான் சிந்திக் கிறேன். திக்கு எட்டு எனில் நம் தமிழ்த் தலைவர்களின் திக்குகளோ 24 எனலாம். விட்டுக் கொடுக்கும் தன்மையோ, கலந்துரையாடும் தன்மையோ, பாராட்டும் தன்மையோ கிஞ்சித்தேனும் இல்லை. **"நம்மை அழிக்க வெளியார் யாரலும் முடியாது. நம்முள் தான் அழிபடுவோம்"** என்ருர் அண்ணு அஃது உண்மைதானே! தமிழ்த் தலைமகனே! இதை மாற்றுவதன்ரோ உம் கடன்! வழி என்ன? வழி என்ன? சிந்தித்துச் சிந்தித்துப் பிறந்தது தான் **"திருக்குறள் பேரவை"**. அடிகளார் துவக்கியுள்ளார்களே என்ற தனிப் பார்வை வேண்டாம் இன்று. குறளின் கீழ்தான் சாதி, சமய, உயர்வு, தாழ்வு 'ஆத்திக' 'நாத்திக' மாறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட முடியும். இதை ஈரோட்டுப் பேரவையின் அமைப்பில் நாங்கள் கண்டு கொண் டோம். இவ்வணியின் தளபதியாகத் தலைமையேற்க வாருங்கள். செயல்படுங்கள். தவத்திரு அடிகளாருடனும் அன்பு கூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

தனி வாழ்க்கையிலும் சரி— பொது வாழ்க்கையிலும் சரி— ஒரு தலைமுறை அயராக் கொள்கை உழைப்பையும், அதனுல் ஏற்படும் துன்பங்களையும் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அதன் பயனை அடுத்த தலைமுறைதான் துய்க்க முடியும். தன் தலைமுறையே, தானே துய்க்க வேண்டும் என்ற மனப் பாங்கு தமிழ்த் தலைவர்கள் எல்லாரிடமும் என்று போகுமோ... அன்று தான் விடிவு! தங்கள் நலம் நாடும்,

—வேலா. இராசமாணிக்கம், ஈரோடு.

## தமிழீழ மலர்ச்சிக்கு உதவுங்கள்.

**ம: 222:** தமிழ்த் தேசிய இனத்தின் நலனில் மிகுந்த அக்கறை செலுத்தி ஏன் அதற்காகவே வாழ்ந்தும் ஏடு நடத்தியும் வருகின்ற பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம். கீழ்க்காணும் எனது வேண்டுகோளுக்குத் தென்மொழியில் இடம் கொடுத்து எமது பணிகளுக்கு உதவுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"மாந்த குல நலனில் அக்கறையும் ஆர்வமும் செலுத்தும் அன்பர்களே! இலங்கை என்பது இருநாடு என்பதும், இரு வேறுபட்ட தேசிய இனங்களின் தாயகம் என்பதும் உங்களுக்குத் தெரியாதவல்ல. அங்கு, சிறுபான்மை இனமான தமிழ்த் தேசிய இனத்தின் நிலமும், தனித் தன்மையும் பெரும்பான்மைச் சிங்களாகளின் அரசாட்சிகளின் திட்டமிட்ட நடவடிக்கைகளால் பழங்கதையாகிக் கொண்டிருக்கும் போது மாந்த உரிமைகள் பற்றிப் பெரிதாகப் பேசுபவர்கள் இச் சிக்கலில் மட்டும் கவனம் செலுத்தாது வாய்மூடி இருப்பதும், உண்மைகளைத் திசைத் திருப்பி வருவதும் துயர் தரத் தக்கதாக உள்ளன.

அங்குச் சிறுபான்மைத் தமிழ்த் தேசிய இனத்தின் நியாயமான உரிமைகள் கூட மறுக்கப்படுவது மட்டுமின்றி அவர்கள் ஒடுக்கவும் படுகின்றனர். அரசியல் சட்டம் தமிழைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ்ப் பேசும் மக்களே வாழ்கின்ற தீவின் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் கூடத தனிச் சிங்களமே அரசக் கரும மொழியாக இருந்து வருகிறது. தமிழ்த் தேசிய இனத்தின் மத, கலையொழுக்க, பொருளியல் வளர்ச்சிகள் புறக் கணிக்கப் படுவதுடன் தமிழ்ப்பேசும் மக்கள் சிங்களர்களைப் பார்க்கிலும் பாகுபாடான முறையில் நடத்தப் படுகின்றனர். அரசுத் துறைகளில் தமிழர்கள் முற்றுகப் புறக்கணிக்கப்படுகின்றனர். சிங்களம் கற்ற தமிழர்களுக்குக் கூட பதவி உயர்வுகள் மறுக்கப் படுகின்றன. இலங்கையே ஒரு பௌத்த சிங்களக் குடியரசு என அறிவிக்கப் பட்டுள்ளபோது அங்கு இன ஒடுக்குமுறை இருப் பதைத் தெளிவாக உணரலாம்.

இன்று இலங்கையில் தமிழ்த் தேசிய இனம் தனது சமநிலை யற்ற நிலையைத் தவிர்க்கும் நோக்குடன் தனது பகுதிப் பாது காப்புக்காகவும் போராடி வருகிறது. இதைக் குறுகிய தேசியக் கருத்து என்றும் 'தன் நிலக் கருத்து' என்றும் தம்மை முற் போக்காளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலரே சொல்லித் திரிவதைப் பார்க்கிறோம். இவர்கள் தேசிய இனச் சிக்கலைப்பற்றி இலெனின் எழுதிய பின்வரும் சொற்களைக் கவனிக்கவேண்டும்.

"மனத் தாங்கலுக்காளான தேசிய இனத்தினர் வேறெந்த உணர்வைக் காட்டிலும் சமநிலை உணர்ச்சிகளுக்கே அதிகம் வயப்

படுகின்றனர். அந்த உணர்வு மீறப்படுகிறது. அதுவும் புறக்கணிக்கும் வகையிலோ விளையாட்டாகவோ, பாட்டாளி இனத் தோழர்களாலேயே மீறப்படுகிறது என்றால் அந்த உணர்வு மேலும் அதிகப் படுகிறது. எனவே இந்தச் சிக்கலில் தேசியச் சிறுபான்மை இனத்தவர்க்குச் சலுகைகள் குறைக்கப் படுவதைக் காட்டிலும் கொஞ்சம் கூடி விட்டாலும் கேடில்லை.

இலங்கையில் தமிழ்த் தேசிய இனம் தான் அழிந்துவிடாமல் இருக்க, சிங்கள வல்லாண்மையின் பிடியில் இருந்து விடுவித்துக் கொண்டு-தான் இழந்துவிட்ட இறைமையை மீட்டுக்கொண்டு வாழ முடிவு செய்து அதற்காகப் போராடி வருகிறது. இதில் நயன்மை, நேர்மை, அறம் உண்டு என்பதால் நாம் இதை ஆதரித்தே ஆக வேண்டும், 'தமிழீழ' விடுதலைக்குக் குரல் கொடுக்க வேண்டும் பெரும்பான்மை இனத்தின் வகுப்பு வெறியைத் 'தேசியம்' என்று பட்டுத்திரையிட்டு உலா விடுபவர்கள் இதற்காக நம்மைக்குறை சொல்லலாம்-குற்றங்காணலாம். பெரும்பான்மை இனத்தின் நயன்மையற்ற செயல்களை எதிர்ப்பது வகுப்புக் கொள்கை என்று முத்திரை குத்தலாம். இனவெறி பிடித்தவர்கள், மொழிவெறி பிடித்தவர்கள் பிரிவினைக்காரர்கள் என்றும் நாம் சாடப்படலாம்; இங்கேயும் இலெனின் நம்மை ஆதரிக்கிறார். எனவே நாம் அணுவளவும் தயங்கவேண்டியதில்லை.

"தன் அமைப்பு உரிமையை-அதாவது பிரிந்து செல்லும் உரிமையை ஆதரிப்பவர்கள் பிரிவினையை ஊக்குவிப்பவர்கள் எனக் குற்றம் சாட்டுவது, சிக்கலுக்கான உரிமையை ஆதரிப்பவாகள் குடும்பப் பிணைப்பைச் சிதைப்பதை ஊக்குவிப்பவர்கள் எனக்குற்றஞ் சாட்டுவதைப் போல் முட்டாள் தனமானதும் மாய்மாலமானதும் ஆகும்'' என்கிறார் மாமேதை இலெனின்.

இந்நிலையில் தமிழீழ விடுதலை இயக்கச் செய்திகள் தமிழகத்திலும் இந்தியாவிலுந்தான் முற்றாக இருட்டடைப்புச் செய்யப் படுகின்றன. தமிழர்கள் என்று மார்தட்டிக்கொண்டு தமிழில் ஏடுகள் நடத்துவோரே இதில் முனைந்து நிற்கின்றனர். எனவே நாம் ஈழ விடுதலை இயக்க உண்மைச் செய்திகளைத் தெரிந்துகொண்டு அதை மக்கள் நடுவிலும் எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கு ஈழ நண்பர்களின் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது இன்றியமையாதது. இதில் நமக்கு உதவ எமது ஈழ நண்பர்கள் அணியமாக உள்ளதோடு எம்மைத் தொடர்ந்து வற்புறுத்தியும் வருகின்றனர். எனவே ஈழ நண்பர்களுடன் மடல் வழித் தொடர்பு கொள்ள ஈழ விடுதலையை நாடுகின்ற நண்பர்கள் அனைவரும் தங்கள் முகவரியுடன் கீழ்க்காணும் எனது முகவரிக்கு எழுத வேண்டுகிறேன்.

—பரிமளா மணாளன், 13பி, இராதாகிருட்டிண பஞ்சாலை
'சி' குடியிருப்பு, பூளைமேடு, கோவை-641 004.

# செய்திகள்

## 1. சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவரில்லம்-முத்தமிழ் விழா.

சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவரில்லத்தின் முத்தமிழ் விழா. கடந்த மார்ச்சு 28, 29, 30, 31-ம் பக்கல்களில் நடந்தது. அதில் மூன்றாம் நாள் நாடக விழாவில் நடந்த பாடற் போட்டி நிகழ்ச்சிக்கு மருந்தியல் துறை பேராசிரியர் பர். வி. இராமசாமி தலைமை தாங்கினார். பேரா. க. அன்பழகன் க. மு., சிறப்புரையாற்றினார். பாட்டுப் போட்டிக்கு நடுவர்களாக, பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும், பாவலர் நேதாசி அவர்களும் வீற்றிருந்து, பரிசுக்குரிய பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தேர்வுரையாற்றினர். 'குடும்பம் ஒரு கோயில்' என்னுந் தலைப்பில் பல்வேறு மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு பாக்களைப் பாடினர். இறுதியில் மாணவர்கள் சார்பில் நடந்த இரவு விருந்தில் சொற்பொழிவாளர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## 2. இளைஞர் மக்கள்கட்சிப் பயிற்சி முகாம் வட்டக்கல்வலசு

ஈரோடு வட்ட, இளைஞர் மக்கள் கட்சி (சனதா) பயிற்சி முகாம் கடந்த 15, 16—4—78-ஆம் பக்கல்களில் வட்டக்கல் வலசு என்னும் ஊரில் நடந்தது. அதன் இரண்டாம் நிகழ்ச்சியில், அக்கட்சி கேட்டுக் கொண்டதற்கேற்பப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'குறள் காட்டும் அரசியல் அறம்' என்னும் தலைப்பில அரியதொரு சொற்பொழிவாற்றினார். எந்த அரசியல் கட்சிக் கொள்கையையும் சாராமல் நடுநின்று, மக்கட்கு நலஞ்செய்யும் அரசியல் கோட்பாடுகளை விளக்கிய ஆசிரியரின் பேச்சை அக்கட்சி இளைஞர்களும், பெரியோர்களும் கேட்டு வியந்தனர் என்பது குறிப்பிடத் தகுந்தது.

## 3. திருச்செங்கோடு, திருவள்ளுவர் விழா.

திருச்செங்கோடு, சங்ககிரி நகை வாணிகர் கழகம் நடத்திய திருவள்ளுவர் விழா கடந்த ஏப்பிரலில் 14, 15, 16-ஆம் பக்கல்களில் திருச்செங்கோடு, கைலாயநாதர் திருக்கோவில் அரங்கத்தில் நடைபெற்றது. அவ்விழாவின் மூன்றாம் நாள் நிகழ்ச்சி இரவு 8 மணியளவில் திருவாட்டி விசாலாட்சி சண்முகம் க.மு., ஆ.ப., (தலைமையாசிரியை, அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு) அவர்கள் தலைமையில், தொடங்கியது. விழாவில்

கோவை திரு. கு. வே. கி. ஆசான் க.மு., சேலம் புலவர் திரு. மி. மு. சின்னுண்டார். பாவலர் திரு. ஈவப்பனுர், கோவை சேரர் கொற்ற அமைப்பாளர் திரு. தென்மொழி மறை. நித்த லின்பனுர் ஆகியோர் சொற்பெருக்காற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் 'திருக்குறள்-தமிழர் வாழ்வியல் நூல்' என்னுந் தலைப்பில் 3 மணி நேரம் அரிய சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சி திருச்செங்கோடு நகை வாணிகர் திரு. எசு. தென்மூக நம்பி (தட்சிணுமூர்த்தி) அவர்களின் பெருமுயற்சியால் நடந்தது குறிப்பிடத்தக்கது.

## 4. திருக்குறள் பேரவை ஈரோடு.

கடந்த 17—4—78 திங்கள் மாலை 7-30 மணியளவில் ஈரோடு, திருக்குறள் பேரவை சார்பாக, மணிக்கூண்டுக்கு அருகில் உள்ள பாலாசி தனிப்பயிற்சிக் கல்லூரி மேல் மாடியில், 'திருக்குறளில் புதிய கண்ணோட்டங்கள்' என்னுந் தலைப்பில், பாவலரேறு பெருஞ் சித்திரனுர் அவர்கள் நீண்ட நெடிய சிறப்புச் சொற்பொழிவொன்று நடந்தது. தொடக்கத்தில் பாவலரேறு அவர்களை வரவேற்று வெ. மேட்டுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி 5-ஆம் வகுப்பு மாணவிகள் தி. வளர்மதி, இரா. கற்பகம், இரா. திலக வதி ஆகியோர், கொம்மக்கோயில் பாவலர் கொ. செ. சின்னப்பா அவர்கள் எழுதிய வரவேற்புப் பாடல்களை உணர்வுப் பெருக்கோடு பாடி வரவேற்பளித்தனர். (பாடல்கள் பின்னர் வரும்.) அவர்களைத் தொடர்ந்து பாவலர் தமிழ்க்குமரன் இனிய எளிய தமிழ்ப்பாவால் பாவலரேறு அவர்களை வரவேற்றூர். அடுத்து, ஈரோட்டுப் பெரு மகனுர் உயர்திரு. வேலா. இராசமாணிக்கனுர் ஆசிரியரவர் களுக்கு வெள்ளிக்கம்பி வேட்டியொன்றும் துண்டு ஒன்றும் போர்த்துச் சிறப்பித்தார். பின்னர் தலைவரவர்கள் முன்னுரையை அடுத்துத் திருக்குறள் பேரவை உறுப்பினர்களுக்குப் பாவலரேறு அவர்கள் உறுப்பாண்மைப் பட்டயங்களை வழங்கினுர்கள். இறுதியில் பாவலரேறு அவர்கள் 3 மணி நேரம் தம் அரிய ஆய் வுரையை வழங்கினுர்கள். நிகழ்ச்சி இரவு 12 மணியளவில் முடி வுற்றது. தம் உரைத் தொடக்கத்தில் பாவலரேறு அவர்கள் தம்மை அளவிறந்து பாராட்டிப் புகழ்வது சிறப்பற்ற வீணன ஒரு நடை முறையென்று வருந்திக் கண்டித்துக் கூறியது குறிப்பிடத்தக்கது.

## 5. சென்னை, தியாகராயநகர் செல்வா நினைவுக் கூட்டம்:

கடந்த ஏப்பிரல் 26-இல், ஈழத்தமிழ்த் தந்தை செல்வா அவர் களின் முதலாமாண்டு நினைவுநாள் கூட்டம் சென்னை, தியாகராய நகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரியார் திடலில், திரு. மணவைத்தம்பி அவர்களின் தலைமையில் நடந்தது, புலவர்

எத்திராசு வரவேற்புரை நிகழ்த்த, திருவாளர்கள் நாகப்பன், இரா. இலிங்கசாமி 'திரைநீதி' செல்வம், சி. செயராமன், செல்வி தன்மானம், தமிழ்மன்னன், அரு. கோபாலன், தென்மொழி மறை. நித்தலின்பனுர், சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன், புலவர். இறைக்குருவனுர் ஆகியோர் செல்வா அவர்களின் வரலாற்றையும், வாழ்க்கையையும், கொள்கைப் போராட்டங்களையும் நினைவு கூர்ந்தனர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் உலகத் தமிழர் எதிர்காலம் பற்றியும் ஈழத் தமிழர் போராட்டங்களைப் பற்றியும், செல்வா அவர்களை நினைவு கூர்ந்தும் எழுச்சியுரையாற்றினுர். இலங்கைத் தமிழர் விடுதலை இயக்கச் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி இரவு 12 மணியளவில் முடிவுற்றது.

## 6 மதுரை திருவள்ளுவர் பண்பாட்டுக் கழகச் சார்பில் நடந்த பாவேந்தர் விழா.

மதுரை, திருவள்ளுவர் பண்பாட்டுக் கழகத்தினர் நடத்திய பாவேந்தர் விழா கடந்த 30—4—78 ஞாயிறு காலை 10 மணியளவில், இரீகல் திரையரங்கத்தில் சிறப்புற நடந்தது. நிகழ்ச்சிக்கு திரு. முத்துராமலிங்கம், க.இ., தலைமை தாங்கிப் 'பாவேந்தரும் இன்றைய தமிழரும்' என்னுந் தலைப்பில் பேசினுர். பின்னர்த் திரு. விவேகி அவர்கள் 'பாவேந்தரும் பகுத்தறிவும்' என்னுந்தலைப்பிலும் பழ. கருப்பையா அவர்கள் 'பாவேந்தரும் தனித்தமிழும்' என்னும் தலைப்பிலும் 'பாவேந்தரும் பொதுமையும்' என்னுந் தலைப்பில் பேரா. தமிழ்க்குடிமகன் க.மு., அவர்களும் சொற்பெருக்காற்றினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் 'பாவேந்தரும் இன்றைய தமிழரும்' என்னுந் தலைப்பில் 2 மணிநேரம் அரியதோர் எழுச்சியுரையாற்றினுர். நெடுநாட்களுக்குப்பின்னர் மதுரையில் நடந்த பாவலரேறு அவர்களின் இக்கூட்ட நிகழ்ச்சிக்கு, அறிஞர் பெருமக்களும் பேராசிரியர்களும், தமிழாசிரியர்களும், தமிழன்பர்களும் ஏராளமான அளவில் கூடியிருந்து கூட்டத்தைச் சிறப்புறச் செய்தனர். மதுரைப் பொன். மாறன் நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# பிற பொதுச் செய்திகள் !

## 1. சுந்தரேசன்—திருமேனியர் வாழ்க !

கடந்த தி. பி. உ00௯ மீனம் 7 (20—3—78) திங்கள் காலை 6-7 மணியளவில், தாராபுரம், உப்புத்துரைப்பாளையம், தமிழகவரசு அரிசி ஆலையில், செல்வன் தி. சுந்தரேசன் (காவல்துறை உதவி ஆய்வாளர்) அவர்களுக்கும் செல்வி திருமேனிக்கும், தென்மொழி மறை. நித்தலின்பனுர் அவர்கள் தலைமையில் திருமணம் நடை

பெற்றது. பல்லடம் தென்மொழி முத்துக்குமரனார் வாழ்த்துச் சிறப்புரையாற்றினார். திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு 10 உருபா நன்கொடையளிக்கப் பெற்றது. மணமக்கள் நீடூழி வாழத் தென்மொழி மனமார வாழ்த்துகிறது.

**2. செல்வி. பூமணி—அந்தோணி திரேசாள்—பூப்பு நீராட்டு விழா:**

கடந்த மீனத் திங்கள் 20-ஆம் பக்கல் (2—4—78) ஞாயிறு காலை 10 மணியளவில், கோபிசெட்டிபாளையம் அரசினர் கலைக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், பேரா. திரு. க. அரங்கசாமி க.மு. அவர்கள் தலைமையில், கோபிபாளையம் தென்மொழியன்பர் ஆசிரியர், திரு. மா. அரசு அவர்களின் செல்வி பூமணி அந்தோணி திரேசாளுக்குப் பூப்பு நன்னீராட்டு விழா, குளக்காடு திரு. கோ. அ. முத்துசாமி அவர்கள் இல்லத்தில் நிகழ்ந்தது. பெரியோர் பலரும், அறிஞர்களும் செல்வி பூமணியை வாழ்த்தினர். இதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா இருபத்தாறு நன்கொடையாக வரப்பெற்றோம். செல்வி பூமணி அந்தோணி திரேசாள் எல்லா நலன்களும் பெற்று வாழத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.

**3. செல்வன் தமிழரிமா வாழ்க!**

சம்மு காசுமீர், உதம்பூர், தென்மொழியன்பர். திருவாட்டி பூபதி பால் திருவாளர் பூபதிபால் அவர்களின் செல்வன் தமிழரிமாவின் 6-ஆவது ஆண்டுப் பிறந்தநாள் (21-5-78) நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 4, அன்பளிப்பாக வரப்பெற்றோம். செல்வன் தமிழரிமா எல்லா நலன்களும் பெற்று வாழ இனிய தமிழ்நெஞ்சால் தென்மொழி வாழ்த்துகிறது.

**4. செல்லப்பா—மகேசுவரி வாழ்க!**

கடந்த 26-1-78-இல், தேனி, தியாகராசநகர் திருமண மண்டபத்தில், தென்மொழியன்பர் திரு. செல்லப்பா அவர்களுக்கும், செல்வி மகேசுவரிக்கும், தமிழ்த் திருமணம் இனிதேநடைபெற்றது. அதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா பத்து நன்கொடையாக வரப்பெற்றோம். மணமக்கள் இருவரும் தண்டமிழ் மொழிக்கும் இனத்துக்கும் பல்லாற்றானும் தொண்டு பல செய்து எல்லா நலன்களும் பெற்று, இனிதே வாழத் தென்மொழி குளிர்ந்த உளத்துடன் வாழ்த்துகிறது.

**5. புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகக் கூட்டம்:**

புதுசேரி, தனித்தமிழ்க் கழகச் செயற்குழுக் கூட்டம், கடந்த மீனம் 8 (21-3-78) மாலை தலைவர் தமிழநேயன் முன்னிலையில்

நடந்தது. அக்கூட்ட முடிவில், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களை இயக்குநராகக் கொண்ட தமிழ்நாடு அரசின் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தை மேலும் பத்து ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும் என்றும், அந் திட்டத்திற்குத் தேவையான ஊழியர்களையும், பாவாணர்க்கு ஒரு மகிழுந்தையும் தமிழ்நாடு அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்றும், தமிழின வளத்தையும், முதன்மையையும் உறுதிப்படுத்தும் அந்நூல் வெளிவரத் தமிழ்நாடு அரசு ஒரு கோடி உருபாவை ஒதுக்க வேண்டும் என்றும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றி அரசுக்கு அனுப்பிவைக்கப் பெற்றது என, அதன் செயலர் திரு. க. தமிழமல்லன் தெரிவிக்கிறார்.

## 6 பாவாணர் பயிற்றகம், கன்னிய கோயில், புதுவை.

புதுவை, கன்னியகோவில், பாவாணர் பயிற்றகம் மாணாக்கரின் வேனிற்கால விடுமுறையை பயனுள்ளதாக்கும் வகையில், கடந்த 21-4-78 முதல் 30-4-78 முடிய இலவயத் தமிழ், ஆங்கில இலக்கண இலக்கிய வகுப்புகளை நடத்தியது. அதன் தொடக்க விழா திரு. பெ. இராமாநுசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் ஆ. சச்சிதாநந்தம், ந. சீனுவாசன், சி. அன்புநிலவன், க.இ., ப.இ., தென்மொழித் தமிழமல்லன், கி. அரியரன், நா. கிருட்டிணமூர்த்தி, கே. இராமச்சந்திரன், பெ. வேணுகோபால் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர் வகுப்புகளை பேரா. ம. இலெ. தங்கப்பா, க.மு., புலவர் தேவிதாசன், அா. இராசாராமன், சி. நாகலிங்கம், கி. அரியரன், பாவலர். புதுவைச் செல்வம், செல்வி மீனலோசனி க.மு., இராச. குழந்தைவேலனுர் ஆகியோர் நடத்தினர். கடந்த 1-5-78 இல் நடந்த அதன் நிறைவு விழாவில், பாவலர் திரு. அன்புநிலவன், க.இ., ப.இ., அவர்கள் தலைமையில் பாட்டரங்கமும், திரு. இராச குழந்தைவேலனுர் க.மு., அவர்கள் தலைமையில் பட்டிமன்றமும் நடைபெற்றன. பாவாணர் பயிற்றகப் பொறுப்பாளர்கள்: திருக்குறள் பெருமாள், புருடோத்தமன் க.மு., திருஞானசம்பந்தம் ஆகியோர். பயிற்றக நிறுவனர்: கதிர். முத்தைபன் ஆசிரியர், அவர்கள்.

## 7. தமிழ் இலக்கிய மன்றம், சின்கோனு நடத்திய பாவேந்தர் விழா, மே நாள் விழா.

கடந்த 1-5-78 ஆம் நாள் மாலை சின்கோனு தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில், பாவேந்தர் பிறந்த நாள் விழா, மே நாள் விழா ஆகியவை கொண்டாடப் பெற்றன. விழாவிற்குப் பர். இராமசாமி, அறிமு., அவர்கள் தலைமை தாங்கினர். திரு. வை. பார்த்திபன் வரவேற்புரை நிகழ்த்தினுர். பாவலர் நெறிமுடியார் பாவேந்தர் பாடல்களை இசை நிகழ்ச்சியாகப் பாடிக்காட்டினுர்!

(தொடர்ச்சி 47-ம் பக்கம்)

வெல்க தமிழ் !

# உலகத் தமிழ்க் கழக
# நான்காவது
# பொது மாநாடு

உலகத் தமிழ்க் கழக நான்காவது பொது மாநாடு தி. பி. 2009 ஆடவை 18 ஆம் பக்கல் (2—7—78) ஞாயிறு அன்று சென்னை-எழும்பூர்ப் பெரியார் திடல் அரங்கில் நடைபெறும். அதற்குரிய அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன!

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்**

மாநாட்டிற்குத் தலைமை தாங்கவும்

மேனாள் முதலமைச்சர்

கலைஞர், பண்டாரகர்

## திரு. மு. அருட்செல்வனார்
## (கருணாநிதி அவர்கள்)

மாநாட்டில் சிறப்புரையாற்றவும் இசைந்துள்ளனர்.

மொழிநூல் மூதறிஞர்

**திருமிகு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்**

முன்னிலையில் நடைபெறும் இம் மாநாட்டில்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்
பர். வ. சுப. மாணிக்கம்
,, மெ. அழகனார் (சுந்தரம்)
,, அவ்வை நடவரசன்
,, ச. வே சுப்பிரமணியம்

முதலிய அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு கருத்துரையாற்ற ஒப்புதல் அளித்துள்ளனர்.

தமிழன்பர்கள் அனைவரும் குடும்பத்தொடும் நண்பினர் அன்பினரொடும் மாநாட்டிற் கலந்துகொள்ள அணியமாகுங்கள்! மாநாட்டிற்குப் பொருள் தண்டும் முயற்சியில் முனைந்து ஈடுபட வேண்டுகின்றோம். தேவையான பற்றுமுறிகளை எழுதிப் பெற்றுக்கொள்க!

**மாநாடு பற்றிய விளக்கமான செய்தி அடுத்த அறிக்கை இடம்பெறும்.**

2, மேற்கு அரசர் தெரு
(West Raja Street)
சென்னை-600016.
—
தி. பி. 2009 விடை இ

**இறைக்குருவன்**
(உ. த. க. பொதுச் செயலாளர்)

---

(45-ஆம் பக்கம் தொடர்ச்சி)

விழாவில், பாவலர் காளியண்ணன், பாக்கியநாதன், திருப்பூர் இறையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மன்றச் செயலர் இராதை மு. சிதம்பரநாதன் நன்றி நவின்றார்.

**௬. தென்மொழி இயவம்-கோவை**

கோவைத் தென்மொழி இயவமும், சேரர் கொற்றமும் இணைந்து விடுத்த வேண்டுகோளை ஏற்றுப் பெயர்ப் பலகைகளைத் தமிழில் எழுதிய வணிக நிலையங்கள் 1. ஒளி முடிதிருத்தகம், 2. சாந்தி முடிதிருத்தகம், 3. கிருட்டிணு முடிதிருத்தகம், 4. முருகன் முடி திருத்தகம், 5. விண்மீன் முடிதிருத்தகம், 6. பாலு முடி திருத்தகம், 7. நவீன தைபலகம், 8. பாலு தையல் நிலையம், 9. பாரத தையலகம், 10. நோமா தையலகம், 11. கோல்டன் தையலகம், 12. அன்பகம், 13. மோகன்ராசு மளிகை, 14. மோகன்ராசு இரும்புக்கடை, 15. இரா. த. தர்மராசன் மகார், 16. உமாசங்கர் உணவகம், 17. இரா. த. இராசன் ஏன வணிகம், 18. தண்டபாணி மளிகை, 19, வசந்தி மளிகை, 20. இந்திரா மளிகை, 21. கண்ணன் அசைவ உணவகம், 22. பரணி உணவகம். 23. மணி கலையகம், 24. வேல் முருகன் மருந்தகம், 26. செந்தில் முக வாண்மையகம், 27. செந்தில் குமார் தேநீரகம், 28. சுவாமிநாதன் ஏன வணிகம், 29. கிட்டம்மாள் இட்லி பலகாரக்கடை, 30. தமிழ் நாடு மரக்கடை, 31. செம்பியன் துணி விற்பனையகம், 32. சௌடாம்பிகா துணி விற்பனையகம், 33. அசோகா மிதிவண்டி அங்காடி. 34. கீதா அரிசி மண்டி, 35. கலைவாணி மாவு அரைவு ஆலை, 36, சண்முகா முடிதிருத்தகம், 37. கணபதி பொறியியல் கூட்டுறவுப் பணி மையம்—ஆகியவற்றுக்குத் தென்மொழி சார்பாகவும், தென்மொழி இயவம், சேரர் கொற்றம் ஆகிய இயக்கங்கள் சார்பாகவும் நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தமிழக அரசின் பார்வைக்கு !

**இந்திரா கால ஆட்சி அதிகாரங்கள், நடைமுறைகள் கொடுமையானவை—என்றால், அக்கால் வேலைநீக்கம் செய்யப்பெற்ற அடியார்க்கு மங்கலம் தமிழாசிரியர்க்கு மீண்டும் வேலை கொடுப்பதில் தவறென்ன?**

இந்திரா ஆட்சியின் கடைசிக்காலமாகிய பிப்ரவரி '77இல் தஞ்சை மாவட்டம், அடியார்க்கு மங்கலத்திலுள்ள அரசு உயர் நிலைப்பள்ளித் தமிழாசிரியர் புலவர் ச. சரவணத் தமிழன் எந்த வகையான விளக்கமும் கேட்கப்படாமல் தமிழக ஆளுநரால் பணியிலிருந்து நீக்கப்பட்டார் (Dismissed) பிறகு அவர் மீது காவல் துறையினரால் "நல்ல தமிழோசை" இதழ் தொடர்பாக-செய்தித் தணிக்கை மீறலுக்காகவும், அச்சுச் சட்டத்தின் கீழும் வழக்குகள் தொடுக்கப்பட்டன. நெருக்கடி நிலை நீங்கியது. இந்தியாவில் இந்திரா ஆட்சி முடிந்தது. ஆனால் தமிழ்நாட்டில் மாறுதல் ஏற்படவில்லை. தமிழாசிரியர்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை அரசு திரும்பப் பெறவில்லை. ஓராண்டுக்காலமாக வழக்கு நடைபெற்றது. 5—4—78இல் நாகை மாவட்ட முறை மன்றத்தில் குற்றச்சாட்டு எள்ளவும் மெய்பிக்கப்படவில்லை என்று தெளிவாகக் குறிப்பிட்டு நடுவர் வழக்குகளைத் தள்ளுபடி செய்து விட்டார். இருந்தும் வேலை நீக்கம் செய்யப்பெற்ற த. ச. தமிழன் அவர்களுக்கு அரசுப்பணி இன்னும் கிடைக்கவில்லை. தங்களுக்கு வேண்டியவர்களுக் கென்றால் ஒன்று, வேண்டாதவர்களுக்கென்றால் ஒன்றா? — இஃதென்ன அரசு நடைமுறை!

அமைச்சர்கள் இவ்வகையில் கண் திறந்து பார்க்க வேண்டுகின்றோம்.

---


# "தமிழ்ச்சிட்டு"

**சென்னை-5.**

| | உள்நாடு | கொழும்பு | பிறவெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் உருபா | 4-00 | 9-00 | 9-00 |
| தனியிதழ் ,, | 0-35 | 0-75 | 0-75 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஒரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

பொதுவுடைமைக்காரர்கள் என்று சொல்லித் திரிபவர்களைப் பொறுத்தவரை சிக்கல் இல்லை. 'இந்த வேள்வி' 'மறை'களில் கூறியுள்ளபடி நடத்தப்படவில்லை, என்று இவர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். ஒருவேளை மார்க்சும் ஏங்கெல்சும் இந்திய இலங்கை பொதுவுடைமையர்களுக்கென்று தனியான பொதுவுடைமை மெய்ம்மத்தை எழுதிக் கொடுத்து விட்டுப் போயிருப்பதாக இவர்கள் சொன்னாலும்சொல்வார்கள். நண்பர்களே, கேட்டுப்பாருங்கள். மதம், மொழி, இனம் பற்றிய நிலைகளில் இவர்களின் நடவடிக்கைகள் புதுமையாக இருக்கின்றன. நான் படித்த அளவில் மார்க்சும் ஏங்கெல்சும் மதத்தை வெறுத்தொதுக்கியிருக்கிறார்கள்; அனைத்து மொழிகளுக்கும், இனங்களுக்கும் சமநிலை வேண்டும் என்றே சொல்லியிருக்கிறார்கள். —நலங்கிள்ளி, சித்த (நாயக்க)ன் பாளையம், கோவை.

0: 581; மதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்கு, வணக்கம். திரு. தா. பாண்டியன் அவர்கள் எழுதிய "கடலுக்கடியில் பழந்தமிழகம்" படித்தேன். அதில், பழந்தமிழர்கள் கட்டிய சில நகரங்கள் சிதையாமல், சிதறாமல் கடலுக்கு அடியில் கிடக்கின்றன என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார். அதனைப் படித்ததும் எனக்கு விவேகானந்தர் பாறை (குமரிமுனை) நினைவுக்கு வந்தது. கடலில் உள்ள அப்பெரும் பாறை, குமரிக் கோட்டின் ஒரு பகுதியாதல் வேண்டும் என்பது என் அறிவுக்கெட்டிய கருத்து. கடலுள் மூழ்கிய நகரங்களைக் கண்டு பிடிக்குமுன், அந்தப் பாறையின் தொன்மையை நிலநூல் வல்லுநர்கள் ஆராய்ந்தால், குமரிக் கண்டத்தின் உண்மைக்கு, நல்லதோர் சான்று கிடைக்கும் என்பது என்னுடைய உள்ளத்தில் எழுந்த கருத்தாகும்.

—கொண்டல் வண்ணன், திருமுருகன் பூண்டி. கோவை, மா.வ.

0.582 : உயர்திரு பாவலர் ஐயா அவர்கட்கு, யான் தொடர்ந்து நான்கைந்து திங்களாகத் 'தென்மொழி' படித்து வருகிறேன். அதன் வழியே உண்மையான தமிழ்ப் பண்பாட்டை யான் அறிந்தேன், ஒரு காலத்தில் பல்கலைகளிலும் உயர்ந்து நின்ற தமிழர்கள் இன்று மிகவும் மோழமை செய்யத்தக்க அளவில் —எள்ளி நகையாடும் நிலைக்கு மாறிவிட்டதற்குக் கரணியம் பிறநாட்டு நாகரிகக் காதலேயாகும். உலகத்திற்கே பண்பாடு கற்றுத் தந்த தமிழினம் இன்று சொந்தப் பண்பாட்டை இழந்து போலியான வாழ்க்கையிலும், புன்மைகூர் கருத்துகளாலும் ஈர்க்கப்பட்டு இழிநிலைக்கு வந்துவிட்டது.

தன்னலம், புறங்கூறுதல், பிறர் சொத்தைக் கவர்தல், பிறன் மனை நயத்தல் போன்ற இழிவான தொழில்களே தமிழரின் பெருஞ்சொத்தாக இன்று உள்ளது. இலக்கியத்தில் தமிழ் இல்லை. இன்றைய பெரும்பாலான பாவலர்களும், புலவர்களும், தூய தமிழில் செய்யுள் இயற்றும் திறனற்றிருக்கிறார்கள். குறிப்பாகக் கண்ணதாசன் அவர்கள் வடசொல்லைக் கலப்பது மட்டுமின்றி வடவர் கொள்கையினையும் பாட்டில் புகுத்துகிறார். இன்றைய எழுத்தாளர்களுக்கு மணிப்பிரவாளம் மிகவும் பிடிக்கிறது. அது மட்டுமன்றி கதை உறுப்பினர்களுக்கு உஷா, கணேஷ், ஸ்ரீதரன், பிரபு, ஹேமா, பிரேமா, லதா, ரீடா, மாலா, பாஸ்கர், சௌந்தர் என்று தமிழல்லாத பெயர்களையும் சூட்டி மகிழ்கின்றார்கள். குறிப்பாக செயகாந்தன் என்னும் கொடுமுடி எழுத்தாளர் தமிழைக் கொல்வதில் முன்னணியில் இருக்கிறார். பழையது என்பதைப் பய்யது என்றும் கிழவி என்பதைக் கெய்வி என்றும் எழுதினால் 'ரியலிசம்'-மெய்யமைவு கிடைக்கும் என்று அவர் கருதக்கூடும்; ஆனால், இலக்கியத்திற்குரிய தனித்தன்மையை இழப்பதுடன் தமிழ்மொழி வழக்கும் அழிகிறது என்பதை அவர் அறிவாரோ என்னவோ! திரைப்படத் துறையிலோ தமிழைக் காணவே முடிவதில்லை. அங்கு, ஜெயவும், ஸ்ரீயும், விஜய்யும், காந்துமாகத்தான் இலங்குகின்றனர்.

பல் துறையில் தமிழை அழித்துவரும் தமிழ்ப் பகைவர்களைத் தமிழர்கள் இன்னும் உணராமல் இருப்பது துன்பம் தரக்கூடிய ஒன்றாக

உள்ளது. ஐயா! இருண்டுகிடக்கும் இத்தமிழினத்திற்கு ஒளியூட்டுவோர் யாரென எண்ணி அலமந்த எனக்குத் 'தென்மொழி' பெரும் தென்பைத் தந்தது. இனி தமிழினத்திற்குக் கவலையில்லையென மனவமைதி எனக்கேற்பட்டது. இருண்ட தமிழகத்தில் ஒளியூட்ட வந்த எழுஞாயிறே! உனது ஒளி இம் மண்ணெங்கும் பரவ என்னாலான தொண்டினைச் செய்யக் காத்திருக்கிறேன். வாழ்க தமிழ்!

—இரா. இலக்குமணன், பின்னையூர். (தஞ்சை)

0; 583: பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பைந்தமிழ்ப் பேரறிஞர் பாவலரேறு அவர்கட்கு, சால வணக்கம். இங்கு 'திருவள்ளுவர் கழகம்' என்ற அமைப்பின் மூலமாக தமிழில் வழிபாடு செய்யக் கேட்டும், இந்திப் படங்களை திரையிடக்கூடாது எனவும், தமிழுக்குத் தீங்கு செய்யாதீர் எனவும் வேண்டுகோள் விடுக்கும் வகையில் நகர் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இந்த மாதத் 'தென்மொழி' கோவைச் செய்தியை எடுத்துக் காட்டி இந்நகர் நகராட்சித் தலைவருக்கும், ஆணையாளருக்கும் தூய தமிழில் கடைப் பெயர்கள் வைக்கக் கட்டளையிடுமாறு கேட்டுத் 'திருவள்ளுவர் கழகத்தின்' சார்பாகக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

—சு. ப. தமிழ்மகன், சிவகெங்கை.

0. 584: தென்மொழியின் சிறந்த தமிழ்ப்பணியை நான் பெரிதும் பாராட்டுகிறேன். தென்மொழி இதழ்கள் படிக்கத் தொடங்கிய பின்பு தான் எனக்கும் ஓரளவு தன்மான உணர்ச்சி வளரத்தொடங்கியுள்ளது. இவ்வுணர்வு என்றென்றைக்கும் நிலைக்கத் தாங்கள்தான் ஆவன செய்யவேண்டும். —இரா. மனோகரன், கோவை-16.

0. 585: பெருமதிப்பிற்குரிய பாவலர்க்கு, வணக்கம். சுவடி 14, ஓலை 8-9, "தென்மொழி" இதழின் ஆசிரிய உரை "உழைப்பும் ஊதாரித்தனமும்" தமிழக மக்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். தென்மொழி வரைந்த ஆசிரிய உரைகளில் முதன்மையானதும் ஆகும். அரசியற்காரர்கள் அதன் கருத்தைக் கவனியாது இருப்பார்களே யானால் காலம் தக்க தண்டனையை வழங்கத் தவறாது! மானங்கெட்ட மாந்தர்கள் தமிழகத்தை இருளாக்கப் பார்க்கிறார்கள். அவ்விருளைப் போக்கி ஒளி நல்குதல் உண்மையான தமிழ் இதழ்களின் பண்பாகும்! அப்படி உண்மை இல்லா இதழ்கள் இனி தமிழகத்திற்குத் தேவை இல்லை என்று மக்கள் விலக்குங் காலம் நெடுந்தொலைவில் இல்லை. —சி. நா. செந்தமிழ்ச் செல்வன், வேங்கைவாடி, தெ. ஆ.

0.586: தனக்கென வாழாத் தமிழ்க்குரியாள! பணிவான வணக்கம். எந்த வழியிலேனும், இந்திமொழி வந்துவிட வாய்ப்பினை எதிர்பார்த்துக் கொண்டுள்ள இக்கால நிலையில், 'உடன்பிறந்தே கொல்லும நோய்' போல், வரைதுறையின்றிப் பிறமொழிக் கலப்பு, புதுப்பா, 30 எழுத்தில் தமிழ் போன்ற புற்றுநோய்கள் தமிழ்த்தாயின் உடலை அரித்துவருகின்றன. இத்தகைய ஆராய்ச்சியாளர்களுக்கே பொருளும், புகழும், இலக்கியப் பரிசுகளும் குவிகின்றன. கலப்பட எழுத்துப் படைப்பாளிகளும், புதுப்பா புனையும் கவிகளும், தமிழ் எழுத்துச் சீர்திருத்தக்காரர்களும் 'தூயதமிழ்' 'தென்மொழி' எனக் கேட்ட அளவிலேயே முகஞ்சுளிக்கின்றனர்; அகங் கடுக்கின்றனர். இக்காலத் தமிழ்க் குமுகாயப் போக்கே, ஏதோவொரு திக்குத் தெரியாத காட்டில் சிக்கிக் கொண்டாற்போன்ற உணர்வினைத் தோற்றுவித்தாலும், வழிகாட்டும் ஒளிவிளக்காய், நிலையான கலை மருந்தாய்த் தொடர்ந்தொளிரும் 'தென்மொழி' காலப் போக்கில் தமிழ்வயலில் மண்டிவிட்டகளைக் கல்லியெறிதலுறுதி!

—பெரு. தமிழ்வேந்தன். பவானிசாகர்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).